'நானும் என் வீட்டாரும் ஆண்டவருக்கே ஊழியம் செய்வோம்' (யோசு 24:15)

# நற்செய்திப் பணியாளர்

(சிவகங்கை மறைமாவட்ட தன்னார்வ நற்செய்திப் பணியாளர்களின் மாதச் செய்தி மடல்)

அருள் :XV ஜூன் கி.பி. 2024 சான்று : 174




புதிய பணியாளர்கள் அறிமுகப் பயிற்சி
வட்டாரத் தியானக் கூட்டங்கள்

**பாசத்திற்குரிய நற்செய்திப் பணிக்குடும்பமே,**

தூய ஆவியானவர் உங்களிடம் வரும்போது நீங்கள் கடவுளது வல்லமையைப் பெற்று எருசலேமிலும், யூதேயா, சமாரியா முழுவதிலும் உலகின் கடையெல்லை வரைக்கும் எனக்கு சாட்சிகளாய் இருப்பீர்கள் (திப 1:8) என்று இயேசு கிறிஸ்து ஆண்டவர் கூறியுள்ளார். நானும், நீங்களும் அவருக்கு சாட்சிகளாய் இருக்க உருக்கத்தோடு இறைவேண்டல் செய்கிறேன். நெஞ்சத்தின் ஆழத்திலிருந்து உங்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன். மே 19ஆம் தேதி நாம் அனைவரும் தூய ஆவியானவர் பெருவிழாவை மகிழ்ச்சியோடு கொண்டாடி மகிழ்ந்திருக்கிறோம். அவ்விழாவை மிகுந்த பொருளுள்ள வகையிலே, அதன் மையப் பொருளை தியானித்து கொண்டாடி இருக்கிறோம் என்று நம்புகிறேன்.

நாம் அனைவரும் தூய ஆவியானவரால் இயக்கப்படுகிறோம், அவர் நம்மில் செயலாற்றுகிறார் என்பதை எப்படி அறிந்து கொள்ள முடியும்? நாம் இயேசு கிறிஸ்துவுக்கு சாட்சிகளாய் வாழும் போது (திப 1:8) தூய ஆவியானவர் நம்மில் செயலாற்றுகிறார் என்று அறிந்து கொள்ள முடியும். இயேசு கிறிஸ்து ஆண்டவர் மனிதராக வந்தவர், என்னை மீட்பதற்காக சிலுவை பலிபீடத்தில் தன்னையே தியாகப் பலியாகத் தந்தவர் என்னும் இறை உண்மையை ஏற்று அறிக்கையிடுகிற எவரும் தூய ஆவியானவரால் இயக்கப்படுகிறார் (1யோவா 4:2,3,9,10) என்பது தெளிவு. நாம் எப்போதும் கடவுளோடு இணைந்து இருக்கிறோம், தொடர்பில் இருக்கிறோம், ஒன்றித்திருக்கிறோம் என்றால் நாம் தூய ஆவியானவரால் இயக்கப்படுகிறோம், அவர் நம்மில் செயலாற்றுகிறார் என்பது தெளிவு (1யோவா 4:13). நாம் உலகத்திற்குரிய காரியங்களில் மூழ்கி இருக்காமல், அதற்கு முக்கியத்துவம் தராமல், உலக சார்ந்தவற்றை பேசிக்கொண்டு இருக்காமல், விண்ணகமே நம் தாய் நாடு என்ற உணர்வில் கடவுளுக்குரிய காரியங்களில், மேல் உலகு (கொலோ 3:1,2) சார்ந்த காரியங்களுக்கு முக்கியத்துவம் தந்து செயல்படும் போது தூய ஆவியானவர் நம்மில் செயலாற்றுகிறார் என்பது உறுதியாகும் (1யோவா4:1,5). நமது பேச்சு கடவுளின் வார்த்தைகளாக இருக்கும் (1பேதுரு 4:11). நாம் பேசுகிற, அறிவிக்கிற இறை உண்மைகளுக்கு, நாம் கடவுளைச் சார்ந்தவர்களாய் இருப்பதால் கடவுளை அறிந்து கொண்டோர் நமக்கு செவிசாய்கின்றனர். இது தூய ஆவியானவர் நம்மை இயக்குகிறார் என்பதற்கான வெளிப்படையான சான்று ஆகும் (1யோவா4:6). நாம் எந்தவிதமான வேறுபாடு காட்டாமல், பாரபட்சம் இன்றி அனைவரையும் அன்பு செய்கிறோம் என்றால் (1யோவா4:7) நாம் தூய ஆவியானவரால் இயக்கப்படுகிறோம், அவர் நம்மில் முழுமையாக செயல்படுகிறார் என்பதை உணர்வுபூர்வமாக புரிந்து கொள்ள முடியும். நம்மிடம் சகோதர அன்பு நிலைத்திருக்காவிட்டால் நம்மில் தூய ஆவியானவர் இருந்து செயல்படுகிறார் என்பதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? அன்பில்லாதோர் கடவுளை அறிந்து கொள்ளவில்லை. ஏனெனில் கடவுள்

அன்பாய் இருக்கிறார்(1 யோவா 4:8). "ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள்" என்னும் புதிய கட்டளையை நான் உங்களுக்கு கொடுக்கிறேன். நான் உங்களிடம் அன்பு செலுத்தியது போல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள். நீங்கள் ஒருவர் மற்றவருக்கு செலுத்தும் அன்பிலிருந்து நீங்கள் என் சீடர்கள் என்பதை எல்லாரும் அறிந்து கொள்வர்(யோவா 13:34,35) என்று நம் ஆண்டவர் தெளிவாகக் கூறியிருக்கிறார்.

நம் நற்செய்திப் பணி குடும்பத்தில், அந்தந்த வட்டாரங்களில், பணிக் குடும்ப உறுப்பினர்கள் என்ற நிலையில் எப்படி இருக்கிறோம்? சுய ஆய்வு செய்வோம். நம்மில் தூய ஆவியானவர் செயலாற்றுகிறாரா?. தூய ஆவியானவரால் இயக்கப்படுகிறர்களே கடவுளின் மக்கள் (உரோ 8:14). நாம் அவரால் இயக்கப்படுகிறோமா?. ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்த வேண்டும் இதுவே அவரது கட்டளை கடவுளுடைய கட்டளைகளை கடைப்பிடிப்பவர் அவரோடு இணைந்து இருக்கிறார். கடவுளும் அவரோடு இணைந்து இருக்கிறார். கடவுள் நம்மோடு இணைந்து இருக்கிறார் என்பதை அவர் நமக்கு அருளிய தூய ஆவியாரால் அறிந்து கொள்ளுகிறோம் (1 யோவா 3:23,24) என்று புனித யோவான் தெளிவாக குறிப்பிடுகிறார். தம் சக மனிதரை அன்பு செய்ய முடியாமல் வெறுப்போடும், பகைமை உணர்வோடும், தூற்றிக் கொண்டும், மனக் காயங்களை ஏற்படுத்திக் கொண்டும், மன்னிக்க முடியாமல் வாழ்ந்து கொண்டு இருப்பவர்களிடம் கடவுளின் தூய ஆவியானவர் செயல்படுகிறார், இயக்குகிறார் என்று எப்படி சொல்ல முடியும்? திரும்பத் திரும்ப ஆண்டவர் நம்மிடம் கூறுவது என்ன தெரியுமா? நீங்கள் என் மீது அன்பு கொண்டிருந்தால் என் கட்டளைகளை கடைபிடிப்பீர்கள் உங்களோடு என்றும் இருக்கும்படி மற்றொரு துணையாளரை உங்களுக்கு தருமாறு நான் தந்தையிடம் கேட்பேன் (யோவா 14:15,16) இதிலிருந்து நமக்கு என்ன தெரிகிறது?. துணையாளரான தூய ஆவியானவர் நம்மில் இருந்தால் ,செயல்பட்டால், நம்மை இயக்கினால், நம்மால் பிறரை அன்பு செய்யாமல் இருக்க முடியாது. மீண்டும் ஒருமுறை 1 யோவான் 4:4-6 வரை வாசித்துப் பார்த்து நம்மை ஆய்வு செய்து தெளிவடைவோம். உண்மையான அன்பு இல்லாத இடத்தில் தூய ஆவியானவர் இல்லை. நீங்கள் மிகுந்த கனிதந்து என் சீடராய் இருப்பதே என் தந்தைக்கு மாட்சி அளிக்கிறது என்று நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து தெளிவாக கூறியிருக்கிறார்(யோவா 15:8). அது என்ன கனி?. அதை தூய ஆவியார். புனித பவுலடியாருக்கு தெளிவாக எடுத்துரைத்திருக்கிறார் (கலா 5:22). அது வேறொன்றுமில்லை. அன்பு என்ற ஒப்பற்ற கனிதான் (1கொரி 13). நம்மில் தூய ஆவியானவர் செயலாற்றுகிறார் என்பதற்கான ஒரே அடையாளம் அன்பு மட்டும்தான். நாம் ஒருவரை ஒருவர் அன்பு செய்து, நாம் கடவுளின் பிள்ளைகள் என்பதையும், நம்மில் தூய ஆவியானவர் செயலாற்றுகிறார் என்பதையும், அவரால் நாம் இயக்கப்படுகிறோம் என்பதையும் ,இந்த உலகிற்கு காட்டுவோம்.

உறவிலும் பணியிலும் உங்களோடு பயணிக்கும்

உங்கள் சகோதரர்

நற்பணி **அ. சகாயராஜா**

# புதிய பணியாளர்கள் பயிற்சி

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி -I பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் 05.05.2024 அன்று நடைபெற்றது. 4 பேர் கலந்து கொண்ட இப்பயிற்சியை நற்பணி J. மேரிபுஷ்பம், நற்பணி S. இராஜேந்திரன் நற்பணி K. ஜஸ்டின் கபிரியேல் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி -II காளையார்கோவில், தந்தை, ஜோசப் சேவியர் அரங்கில் 05.05.2024 அன்று நடைபெற்றது. 11பேர் கலந்து கொண்ட இப்பயிற்சியை நற்பணி M. மரிய கிரகோரி, நற்பணி A. பிரான்சிஸ் சேவியர் நற்பணி V. செங்கோல் மேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி III தங்கச்சிமடம், புனித குழந்தை தெரசாள் கோவிலில் 11.05.2024 அன்று நடைபெற்றது. 20 பேர் கலந்து கொண்ட இப்பயிற்சியை நற்பணி G.M.S ராணி, நற்பணி S. மோட்ச அலங்காரம், நற்பணி A. யூசின் அமலராஜ் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - IV இராமநாதபுரம், புனித செபமாலை அன்னை ஆலயத்தில் 1205.2024 அன்று நடைபெற்றது. 3 பேர் கலந்து கொண்ட இப்பயிற்சியை, நற்பணி J. மேரிபுஷ்பம், நற்பணி S. ஆரோக்கியசாமி, நற்பணி. S. மோட்ச அலங்காரம் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி -V அமைதியகம், காயாவயலில் 12.05.2024 அன்று நடைபெற்றது. 8 பேர் கலந்து கொண்ட இப்பயிற்சியை நற்பணி S. சகாயராணி, நற்பணி J அருள் இளங்கோ, நற்பணி P. அமலோற்பவ ஆரோக்கியராணி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - VI சாயல்குடி, புனித ஆரோக்கிய அன்னை ஆலயத்தில் 26.05.2024 அன்று நடைபெற்றது. 9 பேர் கலந்து கொண்ட இப்பயிற்சியை நற்பணி J. மேரிபுஷ்பம், நற்பணி J. ரபேக்கா, நற்பணி A. சந்திரபுஷ்பா ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி -VII இராசசிங்கமங்கலம், தூய ஆவியார் ஆலயத்தில் 26.05.2024 அன்று நடைபெற்றது. 6 பேர் கலந்து கொண்ட இப்பயிற்சியை நற்பணி A. சத்தியேந்திரன், நற்பணி S. பால்ராஜ், நற்பணி S. தைனஸ்மேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி- VIII கமுதி, புனித அந்தோணியார் ஆலயத்தில் 26.05.2024 அன்று நடைபெற்றது. 4 பேர் கலந்து கொண்ட இப்பயிற்சியை நற்பணி M. அருள் மரியநாயகம், நற்பணி K.ஜஸ்டின் கபிரியேல், நற்பணி T.மிக்கேல் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

| வித்தியாசமான எண்களும் அத்தியாவசியமான இறைவார்த்தைகளும் | |
|---|---|
| தங்களுக்குள் இருந்த கிறிஸ்துவின் ஆவி, கிறிஸ்து படவேண்டிய துன்பங்களையும் அவற்றுக்குப்பின் அடைய வேண்டிய மாட்சியையும் முன்னறிவித்தபோது, ஆவியால் குறிப்பிடப்பட்ட காலமும் சூழ்நிலையும் எவையென்று ஆராய்ந்தனர். | **1 பேதுரு 1:11** |

**நற்செய்திப் பணிக்குழுவின் இணைய தளம்** www.arulchandrunilayam.org

மே 2024 கடந்த மாதச் செயல்பாடுகள்

01.5. 2024 அன்று காயாவயல் அமல அன்னை அமைதியகத்தில் அருளமுது ஆதாரக் கூடுகை நடைபெற்றது. 27 பேர் இணைந்து செபித்த இவ்வழிபாட்டை நற்பணி A. சத்தியேந்திரன், நற்பணி A. சகாயதமிழ்செல்வி, நற்பணி A. இருதய மேரி ஆகியோர் வழிநடத்தினர்கள்.

01.5. 2024 அன்று பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் அருளமுது ஆதாரக் கூடுகை நடைபெற்றது. 74 பேர் இணைந்து செபித்த இவ்வழிபாட்டை நற்பணி V. ரூத் செல்வராணி, நற்பணி A. ஆரோக்கியமேரி, நற்பணி க. சிறிய புஷ்பம் ஆகியோர் வழிநடத்தினர்கள்.

01.5.2024 அன்று அம்புரோஸ் அறநெறி அமைப்பு கூட்டம் அக்காள்மடம் நற்பணி ஜஸ்டின் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. அனைத்து உறுப்பினர்களும் கலந்து கொண்டார்கள்.

19.5. 2024 அன்று தூய ஆவியானவர் பெருவிழா எட்டு மையங்களில் சிறப்பான வழிபாட்டுடன் கொண்டாடப்பட்டது. இறுதியில் பணியாளர்கள் தங்களது அர்பணத்தை புதுப்பித்தனர்.

14 & 15 மே 2024 இரண்டு நாட்கள் A.R. மங்கல சிறுவர்களுக்கான நம்பிக்கை வள மேம்பாட்டுப் பயிற்சி அருள்சான்று நிறையத்தில் நடைபெற்றது. 40க்கும் மேற்பட்ட சிறுவர் சிறுமியர் பங்கேற்றனர். நற்பணி மரியநாயம், நற்பணி G.M.S.ராணி, நற்பணி மேட்ச அலங்காரம், நற்பணி இராஜேந்திரன், நற்பணி ரேவதி, நற்பணி ஆரோக்கிய மேரி ஆகியோர் பயிற்சியை வழிநடத்தினார்கள்.

மே 2024 வட்டாரத் தியானக் கூட்டங்கள்

**புளியால் வட்டாரம்**

புளியால் வட்டாரத் தியானக் கூட்டம் 05.05.2024 அன்று காலை 10.15 மணிக்கு புகழ்ச்சி, பாவமன்னிப்பு மற்றும் ஆவியானவர் செபத்தோடு ஆரம்பமானது. தொடர்பாளராக ஒருங்கிணைப்பாளர் அவர்கள் கலந்துகொண்டு நற்செய்தி பணியாளராகிய நான் உயிர்ப்பு காட்டும் வழியில் பயணிக்கிறேனா? என்ற தலைப்பில் செய்தி வழங்கினார்கள். மதிய உணவிற்கு பின் மூன்று குழுக்களாக பிரிக்கப்பட்டு பகிர்வு நடைபெற்றது. கலந்து கொண்ட பணியாளர்கள் 24 பேர். நன்றி செபம் கொள்கை பாடலுடன் மாலை 4 மணிக்கு நிறைவுற்றது.

நற்பணி L. **ஜான்போஸ்கோ,** வட்டாரக் கண்காணிப்பாளர்

**சருகுணி வட்டாரம்**

சருகணி வட்டாரத் தியானக் கூட்டம் 05.05.2024 அன்று சருகணி பங்கு கோவிலில் நடைபெற்றது. காலை 10 மணிக்கு தொடக்க செபம், புகழ்ச்சி வழிபாடு, பாவமன்னிப்பு வழிபாடு மற்றும் ஆவியானவர் செபத்தோடு துவங்கியது. கடந்த கூட்ட அறிக்கை வாசிக்கப்பட்டது. தொடர்பாளராக நற்பணி தனிநாயகம் கலந்துகொண்டு நான் உயிரிப்பு காட்டும் வழியில் பயணிக்கிறேனா? என்ற தலைப்பில் இறைச்செய்தி வழங்கினார்கள். நற்செய்திப் பணியாளர்கள் கடமைகள் தன்னார்வ நிதி மற்றும் ஆவியானவர் பெருவிழா விரிவாக்க உள்ளுயிர் குழு கூட்டம் பற்றிய தகவல்கள் பகிரப்பட்டன. சருகணி பங்குப் பணியாளர் அருள்பணி லூர்துராஜ் அவர்கள் கலந்துகொண்டு ஆசீர் வழங்கினார்கள். பணி ஒய்வு பெற்ற நற்பணி அருள்தாஸ் அவர்கள் வாழ்த்திப் பாராட்டப்பட்டார். அனைத்து கருத்துக்களுக்காகவும் பரிந்துரை

செபிம் ஏறெடுக்கப்பட்டது. இறுதி நன்றி செபத்துடன் கொள்கை பாடலுடன் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது. 22 பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

நற்பணி **ஆரோக்கியம்.** வட்டாரக் கண்காணிப்பாளர்

**ஆவுடைப்பொய்கை வட்டாரம்**

ஆவுடைப்பொய்கை வட்டாரத் தியானக் கூட்டம் 05.05.2024 அன்று பேதுரு நகர் நற்பணி விக்டோரியா இல்லத்தில் பணியாளர்களின் தொடக்க வழிபாட்டுடன் ஆரம்பமானது. செயலர் தொடர்பாளராக கலந்துகொண்டு நற்செய்தி பணியாளராகிய நான் உயிர்ப்பு காட்டும் வழியில் பயணிக்கிறேனா? என்ற மையப் பொருளில் செய்தி வழங்கி நெறிப்படுத்தினார்கள். 26 பணியாளர்கள் கலந்துகாண்ட தியானக் கூட்டம். பரிந்துரை செபம் மற்றும் கொள்கை பாடலுடன் மாலை 4.00 மணிக்கு நிறைவுற்றது.

நற்பணி **வில்லியம் செபாஸ்டின்,** வட்டாரக் கண்காணிப்பாளர்

**தங்கச்சிமடம் வட்டாரம்**

தங்கச்சிமடம் வட்டாரத் தியானக் கூட்டம் 11.05.2024 அன்று புனித சூசையப்பர் கோவிலில் காலை 10.30 மணிக்கு தொடக்க வழிபாட்டுடன் ஆரம்பமானது. செயலர் தொடர்பாளராக கலந்துகொண்டு நான் உயிர்ப்பு காட்டும் வழியில் பயணிக்கிறேனா? என்ற மையச் சிந்தனையில் செய்தி வழங்கினார்கள். 54 பணியாளர்கள் பங்கேற்றனர். கலந்தாய்வைத் தொடர்ந்து பரிந்துரை செபம் ஏறெடுக்கப்பட்டது. கொள்கை பாடலுடன் தியானம் நிறைவுற்றது.

நற்பணி **லூர்துமேரி,** வட்டாரக் கண்காணிப்பாளர்

**இராமேஸ்வரம் வட்டாரம்**

இராமேஸ்வரம் வட்டாரத் தியானக் கூட்டம் 11.05.2024 அன்று காலை 10.15 மணிக்கு நற்பணி ஐ. செல்வி இல்லத்தில் புகழ்ச்சி வழிபாட்டுடன் தொடங்கியது. நற்செய்தி பணியாளராகிய நான் உயிர்ப்பு காட்டும் வழியில் பயணிக்கிறேனா? என்ற தலைப்பில் தொடர்பாளர் நற்பணி சத்தியேந்திரன் செய்தி வழங்கினார். மதிய உணவிற்குப் பின் பணியாளர்களின் பகிர்வு நடைபெற்றது. மன்றாட்டு அறிவிப்பு மற்றும் கொள்கை பாடலுடன் மாலை 3.30 மணிக்கு கூட்டம் நிறைவுற்றது. 16 பேர் கலந்து கொண்டனர்.

நற்பணி **அந்தோணியம்மாள்,** வட்டாரக் கண்காணிப்பாளர்

**தேவகோட்டை வட்டாரம்**

தேவகோட்டை வட்டாரத் தியானக் கூட்டம் 12.05.2024 அன்று தேவகோட்டை புனித சகாய அன்னை கோவிலில் காலை 10.15 மணிக்கு ஆரம்பமானது. தொடக்க வழிபாட்டை நற்பணி லில்லி புஷ்பம், நற்பணி ஆ. ஆரோக்கிய மேரி. நற்பணி டோமினிக் ஆகியோர் வழிநடத்தினர். தொடர்பாளராக நற்பணி தனிநாயகம் கலந்துகொண்டு நற்செய்தி பணியாளராகிய நான் உயிர்ப்பு காட்டும் வழியில் பயணிக்கிறேனா? என்ற தலைப்பில் செய்தி வழங்கினார்கள். 30 பணியாளர்கள் பங்கேற்ற இக்கூட்டமானது நன்றி செபத்துடன் கொள்கை பாடலுடன் மாலை 3 மணியளவில் இனிதே நிறைவுற்றது.

நற்பணி **கபிரியேல்,** வட்டாரக் கண்காணிப்பாளர்

---

**இப்ப இல்லாட்டி எப்ப ?**

**-எல்லாரோ**

பாவத்திலிருந்து மனம் திருந்துதல் நல்லது தான்.

பாவிகளை மனம் திருத்துதல் அதை விட நல்லதல்லவா?.

**இதை நாம் உணர்வது இப்ப இல்லாட்டி எப்ப?**

பாவத்தினின்று விடுதலை பெற்ற நீங்கள் கடவுளுக்கு ஏற்புடைய வாழ்க்கை நெறிக்கு அடிமைகளாயிருக்கிறீர்கள். அதற்காகக் கடவுளுக்கு நன்றி. (உரோ :6,18)

நீர் போகலம் இனி பாவம் செய்யாதே (யோவா 8:11).

நம் ஆண்டவர் விபச்சாரத்தில் பிடிபட்ட பெண்ணைப் பார்த்து 'நானும் உனக்கு தீர்பளிக்கவில்லை, நீர் போகலாம் இனி பாவம் செய்யாதே' என்றார். இதுபோல முப்பத்தெட்டு ஆண்டுகளாய் முடமாக கிடந்த மனிதரைக் குணமாக்கி விட்டு பின்பு அவரைப் பார்த்து 'இதைவிட கேடானவை எதுவும் உமக்கு நிகழாதிருக்க இனிப்பாவம் செய்யாதீர்' என்றார். இந்தக் கட்டளை எல்லா மக்களுக்கும் கொடுக்கப்பட்டது அல்ல. மாறாக ஆண்டவர் மீது நம்பிக்கை வைத்து பாவம் மன்னிக்கப்பட்டு மறுபிறப்பு அடைந்தவர்களுக்காக கொடுக்கப்பட்ட கட்டளையாகும். ஏனென்றால் நம் ஆண்டவர் தம் பிள்ளைகளின் பாவங்களை மன்னித்துவிட்டு மீண்டும் அவர்களை பாவம் செய்யும்படி அனுப்பவரல்ல. அவர் நம் காயங்களிலிருந்து நம்மை மீட்பவர் (மத் 1:21). எனவே அவரால் மீட்கப்பட்ட பிள்ளைகள் மீண்டும் பாவம் செய்யாதிருக்கவேண்டும் என்பதே அவரது விருப்பம். இன்றைக்கு விபச்சாரம் நிறைந்த உலகில் எந்தப் பக்கம் திரும்பினாலும் பாவ உணர்வுகளைத் தூண்டக்கூடிய நிகழ்வுகளை நாம் அன்றாடம் பார்ப்பதால் பாவம் இல்லாமல் வாழ்வது என்பது மிகப்பெரிய சவாலாகத் தோன்றலாம். ஆனால் இனிப்பாவம் செய்யாதே என்று சொன்னவர் நாம் கடைபிடிக்க முடியாத ஒன்றைக் கூறிவிட்டு வேடிக்கைப் பார்ப்பவர் அல்ல. அதுபோல நம் வலுவின்மையை அறியாதவரும் அல்ல. எந்தத் தந்தையாவது தன் பிள்ளை தூக்கமுடியாத ஒன்றைத் தலையில் வைத்துவிட்டு வேடிக்கை பார்ப்பரா? எனவே பிள்ளைகள் பாவம் செய்யாதிருக்க முடியும் செய்யாதிருக்க வேண்டும் என்பதை அவர் எதிர்பார்க்கிறார். அவரால் மீட்கபட்டப் பிள்ளைகள் மீண்டும் பாவ வாழ்க்கையல் நிலைத்திருந்தால் என்ன நடக்கும் என்று ஆண்டவரே 'மீண்டும் சென்று தன்னைவிட பொல்லாத வேறு ஏழு ஆவிகளைத் தன்னோடு அழைத்துவந்து அவருள் குடியிருக்கும். அவருடைய பின்னைய நிலை முந்தைய நிலையை விடக் கேடுள்ளதாகும்' என்கிறார் (மத் 12:45). இஸ்ரயேல் மக்களை ஆண்டவர் மீட்டதை இவ்வாறு நினைவு கூறுகிறார். நீ பிறந்த வரலாறு இதுவே; நீ பிறந்த அன்று உன் தொப்புள்கொடி அறுக்கப்படவில்லை. நீ நீராட்டப்பட்டு தூய்மைப்படுத்தவில்லை. நீ உப்புநீரால் கழுவாப்படவில்லை, துணிகளால் சுற்றப்படவும் இலை. என்னை இரக்கத்துடன் கண்ணோக்கி உனக்காக வகுத்த இவற்றுள் ஒன்றையேனும் எனக்குச் செய்வதில்லை. நீ திறந்த வெளியில் எறியப்பட்டாய். ஏனெனில் நீ பிறந்த நாளிலேயே வெறுத்து ஒதுக்கபட்டாய். அவ்வழியாய் கடந்துபோன 'நான் உன்னருகில் வந்து உன் இரத்தத்தில் நீ புரள்வதைக்கண்டு இரத்தத்தில் கிடந்த உன்னை நோக்கி வாழ்ந்திடு என்றேன்' என்கிறார் (எசே 16:3-6) பாவிகளாய் இருந்த நம்மையும் ஆண்டவர் இவ்வாறுதான் மீட்டுள்ளார். அவரால் மீட்கப்பட்டு மறுபிறப்பு அடைந்துள்ள அவரது பிள்ளைகள் மீண்டும் பாவத்தில் விழாதபடி தன்னைக் காத்துக் கொள்ளவேண்டும் என்று விரும்புகிறார். எனவேதான் புனித பவுல் தாம் நிலையாக நிற்பதாக நினைத்துக் கொண்டிருப்பவர் விழுந்து விழாதபடி பார்த்துகொள்ளட்டும் என்று எச்சரிப்பு விடுக்கிறார் (1கொரி 10:12) .

ஒருமுறை ஒளியைப் பெற்று விண்ணகக் கொடையை சுவைத்தவர்கள் தூய ஆவியானவரைப் பெற்றவர்கள் ஆவர். கடவுளின் நல்ல வார்த்தையையும் வரவிருக்கும் உலகின் வல்லமையையும் சுவைத்த இவர்கள் நெறிபிறழ்ந்துவிடின்

இவர்களை மனம்மாற்றி மீண்டும் புத்துணர்வு பெறச்செய்வது அறிது. ஏனெனில் இவர்கள் இறைமகனைத் தாங்களே சிலுவையில் அறைந்து வெளிப்படையாக இழிவுபடுத்துகிறவர்கள் ஆவர் (எபி 6:4-6). உண்மையை அறிந்த பின்னரும் வேண்டுமென்றே நாம் பாவத்தில் நிலைத்திருந்தால் இனி நமக்கு வேறு எந்த பாவம் போக்கும் பலியும் இராது (எபி 10:26).

புனித யோவான் குறிப்பிடுவதைக் கவனிப்போம். கடவுளிடம் பிறந்தவர் எவரும் பாவம் செய்வதில்லை. ஏனெனில், கடவுளின் இயல்பு அவரிடம் இருக்கிறது. கடவுளிடமிருந்து பிறந்தவராயிருப்பதால் அவரால் பாவம் செய்ய இயலாது என்கிறார் (1யோ 3:9) மறுபிறப்பு அடைந்தவருக்குள் கடவுளின் உயிராற்றல் இருப்பதால் இப்போது அவரால் துணிந்து பாவம் செய்ய இயலாது. அவர் தூய்மையைத் நாடித் தேடுகிறார். ஆயினும் கடவுளின் இயல்பை பெற்றுக் கொண்ட போதிலும் ஆதாம் வழியாகப் பெற்றுக் கொண்ட பாவ இயல்பு முற்றிலும் நீக்கப்படவில்லை. மறுபிறப்பு அடைந்தவருக்கு முரணாக தூய ஆவியானவரின் விருப்பம் ஊனியல்புக்கு முரணானது. இவை ஒன்றுக்கொன்று எதிராய் இருப்பதால் நீங்கள் செய்ய விரும்புவதை உங்களால் செய்ய முடிவதில்லை என்று பவுல் குறிப்பிடுகிறார் (கலா 5:17). மறுபிறப்பு அடைந்த ஆண்டவரின் பிள்ளைகள் பாவம் செய்ய நேர்ந்தாலும் அதில் நிலைத்திருப்பதில்லை. உடனே தூய ஆவியனவரால் உணர்த்தப்பட்டு மனம் உடைந்து ஆண்டவர் பக்கம் திரும்பிவிடுவார். ஆனால் மறுபிறப்பு அடையாதவர்கள் பாவத்தை உணராமல். அதை நியாயப்படுத்திக்கொண்டு அதிலேயே உழல்கிறார்கள். மறுபிறப்பு அடைந்த ஆண்டவரது பிள்ளைகள் பற்றி கூறும்போது என் பிள்ளைகளே நீங்கள் பாவம் செய்யாதிருக்க வேண்டும் என இதை உங்களுக்கு எழுதுகிறேன். ஆயினும் ஒருவர் பாவம் செய்ய நேர்ந்தால் தந்தையிடம் பரிந்து பேசுபவர் ஒருவர் நமக்கு இருக்கிறார். அவரே மாசற்ற இயேசுகிறிஸ்து (1யோ 2:1). கடவுளின் பிள்ளைகளின் உண்மையான இயல்பை மிகத் தெளிவாக இங்கு எடுத்துக்கூறப்படுகிறது. நல்லவர் ஒருமுறை விழுந்தாலும் எழுந்து நிற்பர் (நீதி 24:16) நாம் எவ்வாறு பாவத்திற்கு விலகி வாழ்வது?. கிறிஸ்து இயேசுவுக்கு உரியவர்கள் தங்கள் ஊனியல்பை அதன் இழிவுணர்ச்சிகளேடு சேர்த்து சிலுவையில் அறைந்து விட்டார்கள் (கலா 5:24) என்ற உணர்வு ஒவ்வொரு நாளும் நம் உள்ளத்தில் இடம்பெற அனுமதிக்க வேண்டும். அவ்வாறு நாம் நம் உள்ளத்தில் உறுதிகொள்ளும் போது நாம் இனிமேல் பாவத்திற்கு அடிமைகளாய் இராதபடி நம்முடைய பழைய மனித இயல்பு அவரோடு சிலுவையில் அறையப்பட்டிருப்பதை உணரலாம் (உரோ 6:6). அவ்வாறு நாம் இந்த உண்மை நிலையை அறியும்போது அன்று சீடர்களுக்காக மிக உருக்கமாக தீயோனிடமிருந்து அவர்களைக் காத்தருளும் என்று விண்ணகத் தந்தையிடம் வேண்டுதல் செய்தவர் (யோ 17:15) இன்றைக்கும் நமக்காக அவர் வழியாக கடவுளிடம் வருபவரை மற்றும் மீட்கவல்லவராக இருக்கிறார்; (எபி 7:25) மக்களுடைய பாவங்களுக்குக் கழுவாயாகுமாறு எல்லாவற்றிலும் தம் சகோதர சகோதரிகளைப்போல ஆகவேண்டியதாயிற்று. இவ்வாறு தாமே சோதனைக்கு உள்ளாகித் தள்ளப்பட்டதனால் சோதிக்கப்படுவோருக்கு உதவி செய்ய அவர் வல்லவர் (எபி 2:17-18). இப்படிப்பட்ட மீட்பர் ஒருவர் நம் அருகில் இருக்கிறார் என்பதை உணர்ந்து நம்மைப் பற்றிக் கொண்டிருக்கும் எந்தப் பாவத்தையும் உதறித் தள்ளிவிட்டு நமக்குக் குறிக்கப்பட்டுள்ள பந்தயத்தில் மனஊறுதியோடு ஓடுவோமாக (எபி 12:1).

நற்பணி M.**விசுவாசம்.** செஞ்சை.

# இது சாத்தியமா ?

நானும் ரொம்ப நேரமா முயற்சி பண்ணிக்கிட்டே இருக்கேன். அம்புரோசு அப்பா அலைபேசிய எங்க வச்சிட்டுப் போனாருனு தெரியல! சரி! மீண்டும் முயற்சிப்போம். சிறிது நேரத்தில் மறு முனையிலிருந்து வந்த குரலொலி. நீங்கள் தொடர்பு கொள்ள விரும்பு வாடிக்கையாளர் வேறு ஒரு வானதூதருடன் தொடர்பில் உள்ளார். சற்று நேரம் கழித்து முயற்சியுங்கள்.

மீண்டும் 5 நிமிடங்கள் கழித்து முயற்சித்த போது லைன் கிடைத்தது. அப்பாடா... ட்ரிங்க். ட்ரிங்க்.. ட்ரிங்

**நற்பணி அம்புரோசு** : ஹலோ. இயேசுவுக்குப் புகழ்!

**நற்பணி இளங்கோ:** அப்பா, இயேசுவுக்குப் புகழ், நான்தான் இளங்கோ பேசுறேன். நல்லா இருக்கீங்களா? அங்க விண்ணகத்தில எல்லோரும் நல்லா இருக்காங்களா?

**நற்பணி அம்புரோசு:** அடடே, இளங்கோவா? நல்லாயிருக்கியா? சமீபத்தில். எங்களோடு விண்ணத்தில் இணைந்த அருள்பணி அல்போன்ஸ்நாதன் உட்பட எல்லோருமே சுகமா இருக்கிறாங்க. ஏன் நீங்க ரொம்ப நாள் பேசவே இல்லையே!

**நற்பணி இளங்கோ :** ரொம்ப busy-ப்பா

**நற்பணி அம்புரோசு :** உலகத்தோடு ஒட்டி உறவாடி ரொம்ப Busy ஆயிட்டியோ? மத் 28:19-ல் சொன்னபடி.

**நற்பணி இளங்கோ :** கொஞ்சம் பொறுங்கப்பா, விவிலியத்த எடுத்துக்கிறேன்.

**நற்பணி அம்புரோசு :** ஏய், நீ பணியாளரா ஆகி எத்தனை வருடம் ஆயிடுச்சு? இன்னும் விவிலியத்துல தேடிக் கண்டுபிடிக்கிறேங்கிற

**நற்பணி இளங்கோ:** அப்பா எடுத்துட்டேன். நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள். அப்பா அதுல எனக்கு ஒரு சந்தேகம்!

**நற்பணி அம்புரோசு :** என்ன சொல்லு "ஆண்டவர் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்" ன்னு சொல்றாரெ! நான் எப்ப உலகம் பூராம் சுத்தி, அமெரிக்க, பிரான்சுன்னு, போயி நற்செய்தி அறிவிச்சு எப்படி சீடராக்குறது? இப்ப உள்ள பணிச்சூழ்நிலையில் நான் எப்படி போறது? இது சாத்தியமே இல்லப்பா.

**நற்பணி அம்புரோசு** : நீ பிரான்சு, அமெரிக்கா, போயி கிழிக்கிறதெல்லாம் இருக்கட்டும். முதல்ல நீ. ஒன் பக்கத்து வீட்டுக்காரங்களுக்கு முன் மாதிரியான வாழ்க்கை வாழ்ந்து. பக்கத்து வீட்டு அந்தோணிசாமியையும் அருள்மேரியையும் சீடராக்கு. அதுக்கப்புறம் அமெரிக்க. பிரான்சு பத்தி யோசிக்கலாம். சரி. நற்செய்திப் பணின்னாலே ஏன் இவ்வளவு யோசிக்கிற? நீ என்ன தனியாவா அந்த பணிய செய்யபபோற? அதே அதிகாரத்துல அடுத்த வார்த்தையை வாசி.

**நற்பணி இளங்கோ :** மத் 28ல் 20தானே!

**நற்பணி அம்புரோசு :** ஆமாப்பா.

**நற்பணி இளங்கோ :** இதோ உலகம் முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்.

**நற்பணி அம்புரோசு :** நற்செய்திப் பணிக்கு அழைப்புக் கொடுத்த ஆண்டவர் நம்மள தனியா விட்டுவிடுவதில்லை. உலகம் முடிவு வரை நம்மோடு இருக்கிறார். எல்லா இடங்களிலும் எல்லா சூழ்நிலையிலும் அவரது துணையோட நற்செய்திப் பணி செய்வது சாத்தியம்தானே! போப்பா. போ. ஆர்வத்தோட பணி செய். நாங்க எல்லோரும் உங்க எலலோருக்காகவும். இங்கிருந்து தொடர்ந்து செபிச்சுக்கிட்டே இருக்கோம்.

**நற்பணி இளங்கோ :** சரிப்பா ஆண்டவருக்கு நன்றி. இயேசுவுக்குப் புகழ்ப்பா.

நற்பணி **அருள் இளங்கோ,** இராம்நகர்

## அணிந்து கொள்வோம் படைக்கலன்களை

“அமைதியை அருளும் நற்செய்தியை அறிவிப்பதற்கான ஆயத்த நிலையை உங்கள் காலில் மிதியடிகளாகப் போட்டுக் கொள்ளுங்கள்” (எபே6:15).

நற்செய்தியை அறிவிப்பதற்கான ஆயத்த நிலையில் முதன்மையானதான அன்பு பற்றி தொடர்ந்து தியானித்து வருகிறோம். நற்செய்தி அறிவிப்பு என்பது பிறர் அன்பின் வெளிப்பாடு என்பதை நாம் ஆழமாகப் புரிந்து கொள்ள வேண்டும். நற்செய்திப் பணி என்பது விடுதலைப் பணியாகவும் விடுவிக்கும் பணியாகவும் இருக்கிறது. நாம் எவற்றிலெல்லாம் அடிமைப்பட்டுக் கிடைக்கின்றோமோ அவற்றிலிருந்தெல்லாம் இறை வார்த்தை ஒளியில் விடுதலை பெற்று நாம் பெற்ற விடுதலை வாழ்வை, வெற்றி வாழ்வை, மகிழ்ச்சி வாழ்வை, அமைதி வாழ்வை பிறரும் பெற்று மகிழ வேண்டும் என்ற மனநிலையில் செய்யும் பிறரன்புப் பணியே நற்செய்திப் பணியாகும். பிறர் மீது நாம் உண்மையான அன்பு கொண்டிருந்தால் அவரது ஆன்மா அழிவுக்கு சென்று விடக் கூடாதே என்று வருந்துவோம். அந்த அக்கறையில் உருவாவது தான் நற்செய்திப் பணி. நற்செய்தி அறிவிப்பதில் உள்ள மனநிறைவை, மகிழ்ச்சியை நாம் வேறு எதிலும் பெற முடியாது. இதையே ஏசாயா “ஆண்டவருக்கு ஊழியம் புரியும் மகிழ்ச்சியைப் பெறுவாய்” என்கிறார் (எசா 58:14). நற்செய்தி அறிவிப்பதன் மூலம் ஆண்டவருக்கு ஊழியம் செய்து பெரும் மகிழ்ச்சியோடு நாம் வாழலாம்.

நற்செய்திப் பணிக்கு அடிப்படை அன்பு தான். அன்பு இருந்தால்தான் நற்செய்தி பணியை ஆர்வமுடன் செய்ய முடியும். கடவுள் மீது நாம் கொண்டுள்ள அன்பால், உறவால் நாம் சுவைத்து மகிழ்ந்த கடவுளைப் பற்றியும் அதனால் நாம் வாழும் அமைதியான வாழ்வைப் பற்றியும் பிறருக்குச் சொல்லாமல் இருக்கவே முடியாது.

“கிறிஸ்து உங்களுக்காகத் தம்மை நறுமணம் வீசும் பலியும் காணிக்கையுமாக் கடவுளிடம் ஒப்படைத்து உங்களிடம் அன்பு கூர்ந்தது போல் நீங்களும் அன்பு கொண்டு வாழுங்கள்” (எபே5:2) என்று புனித பவுல் கூறுவது போல இயேசு ஆண்டவர் என் மீது கொண்ட அன்பினால் எனக்காக பலியானார் என்பதை நாம் அறிந்து அனுபவிக்க வேண்டும். அந்த அனுபவமும் நன்றியுணர்வும் பிறரை அன்பு செய்யத் தூண்டும். நான் அழியாமல் நிலை வாழ்வு பெற தன்னை பலியாக்கிய இயேசுவின் அன்பைப் பிறருக்கு அறிவிக்காமல் இருக்க முடியாது. கிறிஸ்து உங்களிடம் அன்பு கூர்ந்தது போல நீங்களும் அன்பு கொண்டு வாழுங்கள் என்று புனித பவுல்கூறுகிறார். பிறரை அன்பு செய்து வாழும்போது இயேசு கிறிஸ்துவின் கல்வாரி அன்பு நாம் பிரதிபலிக்கிறோம்.

பிறர் மீது நாம் உண்மையான அன்பும் கரிசனையும் கொண்டிருந்தோ- மென்றால் அந்த ஆன்மா அழிவுறுவதைக் கண்டும் காணாமல் இருக்க நம்மால் முடியாது. நாம் அன்பு செய்யும் ஒருவரது ஆன்மா அழிவுறுவதைப் பார்த்துக்கொண்டு சும்மா இருக்க முடியாது. "ஆனால் அவர் மீது நம்பிக்கை கொண்டிருந்தாலன்றி அவர்கள் எவ்வாறு அவரை நோக்கி மன்றாடுவார்கள்? தாங்கள் கேள்வியுராத ஒருவர் மீது எவ்வாறு நம்பிக்கை கொள்வார்கள்? அறிவிக்கப்படாத ஒன்று பற்றி அவர்கள் எவ்வாறு கேள்வியுறுவார்கள்?". (உரோ10:14). நாம் அனுபவிக்கின்ற ஆண்டவர் இயேசுவின் அன்பைப் பற்றி பிறர் கேள்விப்பட வேண்டும். அப்படி அவருடைய அன்பைப் பற்றி பிறர் கேள்விப்பட வேண்டுமென்றால் நாம் அதை மற்றவர்களுக்கு அறிவிக்க வேண்டும். அதைக் கேட்கும் மற்றவர்கள் நம் ஆண்டவர் மீது நம்பிக்கை கொள்வார்கள். இவ்வாறு மற்றவர்கள் ஆண்டவர் இயேசுவின் மீது நம்பிக்கை கொண்டு வாழ அவரைப் பற்றிய நற்செய்தி அறிவிக்கப்பட வேண்டும். அதற்கு நாம் ஒவ்வொருவரும் சிறந்த தயாரிப்புகளோடு தயார் நிலையில் இருக்க வேண்டும். நாம் பெற்று மகிழ்கின்ற இயேசு அனுபவத்தைப் பிறருக்கும் கொடுக்க வேண்டும். அதற்கு நம் இதயம் பிறர் அன்பால் பற்றி எரிய வேண்டும். பிறர் மீது அன்பு கொண்டு வாழும் போது மட்டும் தான் நாம் கடவுளின் பிள்ளைகளாக இருப்போம். கடவுளின் பிள்ளைகளால் மட்டுமே கடவுளை அன்பு செய்வதுபோல் சக மனிதர்களையும் அன்பு செய்ய முடியும். நிபந்தனையில் வராமல் பிறரை அன்பு செய்யும் மனநிலை நமக்குச் சாதாரணமாக வராது. எனவே தூய ஆவியாரிடம் நாம் கேட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஏனென்றால் தூய ஆவியாரின் வழியாகத்தான் கடவுளின் அன்பு நம் மீது பொழியப்பட்டுள்ளது (உரோ5:5). தூய ஆவியானவரின் அன்பினால் நாம் நிரப்பப்பட்டுள்ளதை உள்ளத்தில் உணர்ந்து வாழ வேண்டும். அப்பொழுதுதான் பிறரை அன்பு செய்து வாழும் குணம் நமக்குள் உருவாகும்.

நற்செய்தி அறிவிப்பின் ஆயத்த நிலையான பிறரை அன்பு செய்ய, அவர்களது நிறைகுறையோடு அவர்களை ஏற்றுக் கொள்ள நமக்கு ஆற்றல் தர வேண்டும் என்று தூய ஆவியானவரிடம் செபிப்போம். இயேசுவே உமது அன்பினால் என்னை நிரப்பும் எல்லோரையும் உமது அன்பினால் நேசிக்க எனக்கு உதவும் என்று அடிக்கடி அறிக்கையிட்டு செபிப்போம். அதன் மூலம் இயேசுவின் அன்பை பெற்று பிரதிபலித்து வாழ்ந்து நற்செய்தி அறிவிக்க ஆயத்தப் படுவோம்.

நற்பணி **ச.சகாயராணி,** இராம்நகர்.

---

# யார் கிறிஸ்துவின் பணியாளர்?

பொதுவாக பணியாளர் என்பவர் அவரது தலைவரின் பணியை ஏற்றுசெய்பவரே. இயேசுகிறிஸ்துவின் பணி விண்ணரசுக்காய் மக்களை தயாராக்குவது (லூக்கா 4:18-19). கடுஞ் சினங்கொள்பவனோடு நட்புக்கொள்ளாதே; எரிச்சல்கொள்பவனோடு தோழமை கொள்ளாதே. அப்படிச் செய்தால் அவர்களின் போக்கை நீயும் கற்றுக்கொள்வாய்; உன் உயிர் கண்ணியில் சிக்கிக் கொள்ளும். (நீமொ 22:24-25) அதனாலேயே எனக்கெனத் தூயவர்களாக இருப்பீர்களாக! ஏனெனில், ஆண்டவராகிய நான் தூயவராயிருந்து நீங்கள் என்னுடையவர்களாக இருக்கும்படி உங்களை மக்களினங்களினின்று பிரித்தெடுத்தேன் (லேவி 20:26) என்று கூறுகிறார். யாரெல்லாம் அவரது பணியை உண்மையாக செய்யும் போது பெரும்பாலானோருக்கு பிடிக்காமல் போய் தனிமைப்படுத்தப்படுகின்றனர். ஆனால், கடவுளின் ஆவி உங்களுக்குள் குடிகொண்டிருந்தால், நீங்கள் ஊனியல்பைக் கொண்டிராமல், ஆவிக்குரிய இயல்பைக் கொண்டிருப்பீர்கள். கிறிஸ்துவின்

ஆவியைக் கொண்டிராதோர் அவருக்கு உரியோர் அல்ல (உரோ 8:9). மேலும் பணியாளர்கள் எத்தகைய உயர்வையும் பெரிதாக கருதாமல் அவருக்காக தன்னையே வெறுமையாக்கிக் கொள்ள வேண்டும் (பிலி 2:6). 'நான் செய்தது போல நீங்களும் செய்யுமாறு நான் உங்களுக்கு முன்மாதிரி காட்டினேன் (யோவான் 13:15) என்று கூறுவதிலிருந்து உறுதிப்படுத்திக்கொள்ளலாம். ஒரு உண்மையான பணியாளர் தனது தலைவரை எல்லா இடத்திலும் பிரதிபலிக்கிறார். அப்படி பிரதிபலித்தவர்கள்தான் புனதர்களான சவேரியார், அசிசியார் போன்றவர்கள். சிலர் கூறலாம் அவர்கள் புனிதர்கள், அவர்களால் கூடும் நாம் சாதாரண மனிதர்கள். சமூகம் சார்ந்து இந்த சமூகத்துக்குள்ளே தானே வாழவேண்டியுள்ளது என்று நினைக்கிறோம். ஆனால் சமீப காலத்தில் ஒரு அருள்சகோதரி பணிபுரிந்து மறைந்த பகுதியில் அவர் ஆற்றிய பணியின் தாக்கத்தைப் பார்த்தபோது உண்மையான பணியாளரின் பொருளை உணர்ந்தேன். அருள்சகோதரியின் பெயர் பெர்பெத்துவா என்ற ஜேம்ஸ் இவர் குளுனி சபையில் சகோதரியாக அர்ப்பணம் ஏற்று புறங்கரை என்னும் ஊரில் உள்ள ஏசுவை அறியாத ஏழை மக்களுக்கு பணி செய்து தனது பணிவாழ்வின்மூலம் இயேசுவை அங்கு பிரதிபலித்து அந்த ஊரை ஒரு கிறிஸ்தவ ஊராக மாற்றினார். அந்த ராமத்திற்கு இன்றும் சரியான பேருந்து வசதி இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தனது உறவினர்களிடம் பண உதவி பெற்று கிராமத்தில் பல சமூகப்பணிகடின மேற்கொண்டார். நீரழிவுநோய் தாக்கி நடப்பதற்கு சிரமப்பட்டபோதும் புறங்கரை சென்று அந்த மக்களுக்கு இயேசுவை அறிவித்தார். புறங்கரை மக்களின் வீடு சந்திக்கும் வாய்ப்பை எனக்கு கடவுள் அருளினார். அங்கிருந்தவர்களிடம் பேசியபொழுது சகோதரியின் பணியின் தாக்கத்தை என்னால் புரிந்துகொள்ள முடிந்தது. 19.12.2023 அன்று அவர் விண்ணப் பிறப்படைந்தபின் அவ்வூர் மக்கள் கோவிலுக்கு அருகில் அவருக்கு ஓர் நினைவிடத்தை எழுப்பியுள்ளனர். அந்த சகோதரி வாழ்விலிருந்து பணியாளராக நான் கற்றுக் கொண்ட பாடங்கள்

1. அவர் இயேசுவின் மனநிலையை பெற்றிருந்தார்.
2. ஒடுக்கப்பட்டோரை தேடிச் சென்று இயேசு செய்த பணிகளை இவர் தொடர்ந்து செய்தார்.
3. தன்னிடம் உள்ள இயேசுவை மற்றவர்களுக்கு வழங்கினார்.
4. பொருளையும், நேரத்தையும் கூட இயேசுவுக்காக இழந்தார்.
5. உலக ஆடம்பரங்களையும் பதவிகளையும் துறந்து இயேசுவுக்காய் துன்பம் நிறைந்த இடத்தில் வாழ்ந்தார். தன் தலைவரைப்போல துன்பத்தை ஏற்றுக்கொண்டார்.
6. இயேசுவைப்போலவே விண்ணரசுக்கு மக்களை தயார்படுத்தினார்.
7. தன்னைத்தாழ்த்தி ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைக்காக உழைத்தார்.
8. ஆவிக்குரிய இயல்பை பெற்றிருந்தார்.
9. தன் வாழ்வின் மூலம் இயேசுவை அறிவித்தார்.
10. பிரதிபலன் எதிர்பாராத அன்பே தலைசிறந்தது என்று வாழ்ந்தார்.

இயேசு செய்த பணியை பின்பற்றி இயேசுவின் மனநிலையில் அவரை பிரதிபலித்த அருள்சகோதரி போல நாமும் விண்ணரசிற்கு மக்களைத் தயார் செய்வோம். நாமும் தயாராவோம்.

நற்பணி **ஜஸ்டின்**



# தர்மம் (ALMS)

தர்மம் செய்வது கிறிஸ்தவ வாழ்வுக்கு மிகவும் அவசியமானது. தர்மம் நம்முடைய மனவிருப்பத்தின்படி செய்யும் செயல் அல்ல. அது இறைவனுடைய விருப்பத்தின்படி செய்வது. இறைவனுக்குப் பிரியமானது (2கொரி 9:7, எபி 13:16). எனவே, ஒவ்வொருவரும் முகமலர்ச்சியோடு தர்மம் செய்யவேண்டுமென்றே இறைவன் எதிர்பார்க்கிறார். ஏனெனில், செல்வமும் மாட்சியும் இறைவனிடமிருந்தே வருகின்றன (1 குறி 29:12). தர்மம் என்ற வார்த்தைக்கு கிரேக்க மொழியில் இரக்கம் என்று பொருள். எனவே, இரக்கத்தின் அடிப்படையில் பிறருக்கு உதவிசெய்ய நாம் பணிக்கப்படுகிறோம். நம்முடைய நற்செயல்களை இறைவன் அறிவார். அவருக்கு மறைவானது ஒன்றுமில்லை (திபா 139:2). இறைவன் நம்முடைய நற்செயலைப் பார்த்து மட்டுமல்ல. அவற்றின் நோக்கம் என்ன என்பதையும் கவனிப்பவர். கிறிஸ்தவ வாழ்க்கையின் நோக்கம், மனிதர்களின் கவனத்தைத் தன்னிடம் அல்ல. இறைவனிடம் இழுக்கும்படியாக இருக்கவேண்டும். இறைவனை மகிமைப்படுத்த வேண்டுமே தவிர, மனிதர்களை அல்ல, மனிதர்களின் பாராட்டையும், புகழையும் பெறுகின்ற வகையில் சுயநல நோக்கத்தோடு தர்மம் செய்யும்போது அதன் பயனாக, இந்த உலகத்தின் செல்வாக்கைத் தாராளமாய்ப் பெற்று, கைம்மாறும் அடைந்து கொள்கிறார்கள். இவர்கள் இவ்வுலகமே கதியென வாழ்ந்து மடியும் மனிதர்கள் (திபா 17:14). இப்படிப்பட்டவர்கள் விண்ணகத் தந்தையிடமிருந்து எந்த ஒரு கைம்மாறும் பெற்றுக்கொள்ளவே முடியாது என்று இயேசு ஆண்டவர் கூறுகிறார். ஆகவேதான், "நீங்கள் தர்மம் செய்யும்போது உங்கள் வலக்கை செய்வது இடக்கைக்குத் தெரியாதிருக்கட்டும்" (மத் 6:3) என்கிறார்.




ஒரு மனிதனுடைய இடது கையைவிட வலது கையே அதிகமாக பயன்படுத்தப்படுகிறது. ஆகவே, தர்மம் செய்ய அதைப் பயன்படுத்துவது முறைதான். ஆனால், "வலக்கை செய்வது இடக்கைக்குத் தெரியாதிருக்கட்டும்" என்று இயேசு ஆண்டவர் சொல்வதன் பொருள். அதாவது, நாம் தர்மம் செய்யும்போது மற்றவர்களுக்குத் தெரியாதபடி மறைவாய்ச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் மட்டும் போதாது. நாம் செய்கிற இந்த நற்செயலை நாமே அறிந்து கொள்ளக் கூடாது. அது பற்றி நம்முடைய டைரியில் எழுதி வைக்கக் கூடாது. மனிதனை மேம்படுத்திக் கொள்வதால் ஏற்படும் ஆபத்தை நாம் அறிந்து செயல்பட வேண்டும் (திப 12:23). நாம் தர்மம் செய்யும்போது நம்மை அறியாமலேய நம்மை குறித்த ஒரு பெருமை உணர்வு நமக்குள் வந்து விடுகிறது. இந்தக் கடமையைச் செய்யாதவர்களைவிட நம்மை உயர்ந்தவர்களாக நினைக்க ஆரம்பிக்கிறோம். ஆகவே, நம்முடைய குடும்பத்தாருக்கும் தெரியாபடி மறைவாய்த் தர்மம் செய்யவேண்டும். மேலும், உற்றார், உறவினர், உலகத்தார் நம்மை கைதட்டிப் பாராட்டுவார்கள் என்ற எண்ணமோ, ஏக்கமோ எதிர்பார்ப்போ நம்மிடம் இருக்கவே கூடாது. "கடவுள் ஒருவரே. அவர் தரும் பெருமையை நாடாது ஒருவர் மற்றவரிடமிருந்து பெருமை தேடிக் கொள்கிறீர்களே, உங்களால் எப்படி என்னை நம்ப இயலும்?" (யோவா 5:44). இறைவனின் பெயர் மட்டுமே மகிமை பெறும் வகையில் நாம் தர்மம் செய்ய வேண்டும். அப்பொழுது, மறைவாய் உள்ளதைக் காணும் இறைவன் நமக்கு கைம்மாறு அளிப்பார்.

தேவையில் இருப்பவர்களுக்கு அன்பு காட்டி உதவி செய்வது நம்முடைய உடல் உழைப்பையும் நேரத்தையும் மற்றவர்களுடைய நன்மைக்காகச் செலவு செய்வது, சோர்வுற்றோர் நெறிதவறியோர் ஆகியோருக்கு புத்துயிர் அளிக்கும் வகையில் சரியான வழியைக் கற்பிப்பது தர்மமாக கருதப்படும்.

பெரும் பணக்காரர் ஒருவர் திடீரென காணாமல போனார். அவரது குடும்பத்தார் அதிக செலவு செய்து தேடியும் அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆகையால், அவரது வீட்டை விற்கும் பரிதாப நிலைக்கு வந்தனர். வீட்டை வாங்கியவர் அந்த இடத்தில், புதிய வீட்டைக் கட்டுவதற்கு, பழைய வீட்டை இடிக்க ஏற்பாடு செய்தார். வீட்டை இடிக்கும்போது தரையில் ஒரு ரகசிய அறை இருப்பதைக் கண்டார்கள். அந்த அறைக்குள் ஏராளமான பொன் செல்வங்களுடன். ஒரு உருவிழந்த உடலும் கிடந்தது. நடந்து என்ன தெரியுமா? வழக்கம்போல ரகசிய அறைக்குள் இறங்கிய பணக்காரர். தானியங்கி கதவின் சாவியை எடுத்துச் செல்ல மறந்துவிட்டார். இப்படியொரு அறை இருப்பது வீட்டாருக்கே தெரியாது. யாருக்கும் தர்மம் செய்யாத அந்த கஞ்சனுடைய பணம் அவருக்கே ஆபத்தாய் மாறியது.




**தர்மம் செய்வதால் வரும் ஆசீர்**

i) நாம் மனிதர்களுக்குச் செய்யும் உதவிக்கு இறைவன் எப்படி கைம்மாறு செய்வார் என்று நாம் நினைக்கலாம். ஏழை எளியவர்களுக்குச் செய்த நன்மைகள் அனைத்தையும் தானே பெற்றுக் கொண்டதாக சொல்லி ஆண்டவர் மனமகிழ்கிறார் (மத் 25: 40). இயேசுவின் சகோதர, சகோதரிகள் என்று சொல்லக் கூடிய ஏழை எளியவர்களுக்கு நாம் தர்மம் செய்யும்போது எப்படி அவரால் கைம்மாறு செய்யாமல் இருக்க முடியும். "ஏழைகளுக்கு இரங்கி உதவி செய்கிறவர் ஆண்டவருக்குக் கடன் கொடுக்கிறார்; அவர் கொடுத்ததை ஆண்டவரே திருப்பித்தந்து விடுவார்" (நீமொ 19:17).

ii) செல்வரான இளைஞர் ஒருவர் இயேசுவிடம் வந்தபோது "நிறைவுள்ளவராக விரும்பினால் நீர் போய் உம் உடமைகளை விற்று ஏழைகளுக்குக் கொடும். அப்பொழுது விண்ணகத்தில் நீர் செல்வராய் இருப்பீர்" (மத் 19:21) என்கிறார். ஆக, ஏழை எளியவர்களுக்குச் செய்யும் நன்மை இறைவனுக்கே செய்வதால் இறைவனின் மேலான ஆசீரை நாம் பெற்றுக்கொள்ள முடியும்.

**தர்மம் செய்தலின் அவசியம்**

i) இறுதித் தீர்ப்பு நாளில் மானிடமகன் மாட்சியுடன் வரும்போது, நன்மை செய்தோரை முடிவில்லா பேரின்ப வாழ்வுக்கும். நன்மை செய்யாதோரைப் பார்த்து "மிகச் சிறியோராகிய ஏழை எளியவர்களுக்கு நீங்கள் எதையெல்லாம் செய்யவில்லையோ அதை எனக்கே செய்யவில்லை என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்" (மத் 25:45) என்று சொல்லி அவர்களை முடிவில்லாத் தண்டனைக்கு அனுப்புகிறார். ஆகவே, தர்மம் செய்யாதோருக்குப் பயங்கரமான தண்டனை உண்டு

ii) செல்வம் படைத்த ஒரு மனிதனும் அவனை நம்பியிருந்த ஏழை இலாசரைப் பற்றியும் நாம் அறிவோம். செல்வம் படைத்த மனிதர் செய்த ஒரே தவறு தன் வீட்டு வாசலருகே கிடந்த ஏழை லாசரைக் கண்டு கொள்ளாமல் இருந்ததுதான். அதற்காக மறுமையில் அவன் பயங்கரமான தண்டனையை அனுபவிக்கிறான். இந்தத்

தீப்பிழும்பில் மிகுந்த வேதனைப் படுகிறேன் (லூக் 16:24) என்று கதறும் பரிதாபமான நிலையில் அவன் ஒரு சொட்டுத் தண்ணீருக்காக ஏங்குகிறான். ஆனால். அது அவனுக்குக் கொடுக்கப்படவில்லை.

நாம் கடவுளின் கைவேலைப்பாடு நற்செயல் புரிவதற்கென்றே கிறிஸ்து இயேசு வழியாகப் படைக்கப்பட்டிருக்கிறோம். இவ்வாறு நற்செயல் புரிந்து வாழும்படி கடவுள் முன்கூட்டியே ஏற்பாடு செய்திருக்கிறார் (எபே 2:10). ஆகவே, ஆண்டவரின் கரங்களாக இருந்து செயல்பட நம்மை அழைத்திருக்கிறார். எனவே இறைவன் நம்மிடம் ஒப்படைத்த ஆசீர்வாதங்களைப் பிறருக்குக் கொண்டு செல்லும் வாய்க்காலாக செயல்படுவோம்.

நற்பணி **ஆரோக்கியசாமி.ஜே**

## ஜூன் 2024 வட்டார தியானக் கூட்டம்

| வ.எ | தேதி | வட்டாரம் | தொடர்பாளர் |
|---|---|---|---|
| 1. | 02 | செஞ்சை<br>9442758641 | நற்பணி J. ஆரோக்கியசாமி<br>8248899247 |
| 2. | 02 | இராம்நகர்<br>9442959569 | செயலர்<br>9787967272 |
| 3. | 02 | செக்காலை<br>9150579311 | நற்பணி A. சகாயராஜா<br>9443509152 |
| 4. | 02 | சாலைகிராமம்<br>8526754557 | நற்பணி M. சேவியர்<br>7010407853 |
| 5. | 09 | சி.கே.மங்கலம்<br>9626303395 | நற்பணி M. விசுவாசம்<br>9442758641 |
| 6. | 09 | மகிண்டிமிக்கேல்பட்டணம்<br>9524495693 | நற்பணி M. மரியகிரகோரி<br>9486965799 |
| 7. | 09 | காளையார்கோவில்<br>9443210772 | செயலர்<br>9787967272 |
| 8. | 15 | அரிமளம்<br>9787967272 | செயலர்<br>9787967272 |
| 9. | 16 | பரமக்குடி<br>9443503294 | செயலர்<br>9787967272 |
| 10. | 16 | கமுதி<br>9444712047 | நற்பணி A. சகாயராஜா<br>9443509152 |
| 11. | 22 | தங்கச்சிமடம்<br>(சிறப்பு வட்டாரக் கூட்டம்)<br>9585998614 | செயலர்<br>9787967272 |
| 12. | 23 | இராமநாதபுரம்<br>9489037889 | நற்பணி L. ஆரோக்கிசாமி<br>9150579311 |
| 13. | 23 | சிவகங்கை<br>9943165532 | Sr. ஜோஸ்பின்பச்சைஜோதி<br>7708282117 |
| 14. | 23 | முத்துப்பேட்டை<br>9940745169 | செயலர்<br>9787967272 |

# சீடத்துவ குடும்பம்
## (யூபிலி ஆண்டின் தயாரிப்பாக)

ஒரு பிரபலமானவரின் பெண் புதிதாய் திருமணமாகி புகுந்த வீடு சென்றாள். அங்கே அவளை யாரும் புரிந்து கொள்ளவில்லை என்று நினைத்து பெற்றோருக்குக் கடிதம் எழுதினாள். அவர்கள் தனக்கு சாதகமாகப் பேசுவார்கள் என்று நினைத்துக் கொண்டிருந்தாள்.

அவளின் அம்மா அப்பா உனக்கு கடிதம் எழுதுவார் என்று ஒதுங்கிக் கொள்ள அப்பாவின் கடிதம் வந்தது. அதில், "நீ புகுந்த வீட்டில் உள்ள அனைவருடனும் இனிமையாகப் பேசு. உன் மனதுக்குள் விளக்கு ஏற்று. அது எல்லோரையும் இருளிலிருந்து வெளிச்சத்திற்கு அழைத்து வரட்டும் .

பொதுவாக எண்ணம் குட்டி போடும் தன்மையுடையது. எந்த எண்ணமும் தனியாகத் தோன்றித் தனியாக மறைவது இல்லை. தன்னைப் போல் பத்து ,நூறு என்று அடுக்கடுக்கான எண்ணங்களைத் தோற்றுவிக்கும். எனவே தேவையற்ற எந்த எண்ணங்களுக்கும் இடம் தராதே.

நான் சோர்வாக இருக்கிறேன். தோல்வி அடைந்து விட்டேன். வாழ்க்கை வெறுப்பாக இருக்கிறது என்று ஒரே ஒரு முறை நினைத்தால் கூட அது குளத்தில் எறிந்த கல்லினால் ஏற்படும் வட்டங்கள் போல் பெரிதாகி பெரிதாகி ஆளையே அழித்துவிடும்.

அதற்கு மாறாக நான் நல்லவள் என்று நினை. எனக்கு எல்லோரையும் பிடித்திருக்கிறது. எனக்கு எதிரிகளே இல்லை. எனக்கு எல்லோரிடமும் பிரியம் உண்டு. எல்லாருக்கும் என்னைப் பிடிக்கும். எல்லாரும் என்னை நேசிக்கிறார்கள் என்பதை உள்ளத்தில் பதி".

ஒரு தந்தை தன் திருமணமான தன் அன்பு மகளுக்கு எழுதிய நீண்ட கடிதம். அதில் பொதிந்திருக்கும் உண்மையும் கரிசனையும் அவரை ஒரு சிறந்த தந்தையாக நம்முன் நிலைநிறுத்துகிறது. (இத்தகைய பெற்றோர் அமைந்துவிட்டால் எத்தனையோ விவாகரத்துகள் குறையுமே) நல்ல பெற்றோரால் மட்டுமே பிள்ளைகளுக்கு சரியாக பாதை காட்ட முடியும்.

ஒரு சீடத்துவத்துவ குடும்பம் என்றால் எப்படி இருக்க வேண்டும்? முன் மாதிரிகை வாழ்வியல் கட்டமைப்பால் தமது சந்ததிகளுக்கு எதை தந்துவிட்டு போக முடியும்? என்பது பற்றி, விவிலிய மாந்தர்களின் வழியில், இறைவார்த்தைகளின் ஒளியில் சற்றே தியானிப்போம்.

**சீடத்துவ தந்தை :** அது ஒரு பெந்தகோஸ்து திருவிழா நாள். அரசனால் கொல்லப்பட்ட தன் இனத்தாரின் சடலங்களை அடக்கம் செய்ததற்காவே அரசனின் கோபத்திற்கு ஆளாகி அனைத்தையும் இழந்து, பின் அரசனின் மகன் அரசாட்சிக்கு வந்த பின் தான் அவருக்கு அவரின் மனைவியும், பிள்ளையும் திரும்ப கிடைக்கப்பெற்றனர்.

வெகுநாட்களுக்குப்பின் ஒன்று சேர்ந்த குடும்பத்தினர் வீட்டில் திருவிழா விருந்து ஏற்பாடு செய்யப்படுகிறது. பலவகை உணவு வகைகள் படைக்கப்பட்டு பரிமாறப்படுகின்றன. பசியும் ருசியும் முன்னிற்க அந்த குடும்பத் தலைவர் தன் மகனிடம் கூறுகிறார். "மகனே! கடவுளை முழுமனதோடு தேடும் ஏழை எவராவது

இருந்தால் அழைத்து வா. அவரும் என்னோடு உணவருந்தட்டும். நீ வரும் வரை உனக்காகக காத்திருப்பேன் மகனே!" என்கிறார் (தோபி 2:1-2)

பசிக்கு முன் மனிதன் ஒன்றுமே இல்லை என்று போய் விடுவான். சகலத்தையும் பின்னுக்குத்தள்ளி வயிறு ஒன்றே பிரதானம் போல நினைக்க வைப்பது பசி. அப்படிப்பட்ட பசியை பின்னுக்கு தள்ளி மனித நேயத்தை முன்வைக்கிறார். மாமனிதராய் திகழ்ந்த தோபித்து. "நகரை அடக்குகிறவரை விடத் தன்னை அடக்குகிறதே சிறந்தவர் " ( நீமொ 16:32) என்கிற இறைவார்த்தை. தன்னை அடக்கும் தன்மையையும், தர்மசிந்தனையையும் தன் மகனுக்கும் பழக்குகிறார் தோபித்து.

யூபிலி ஆண்டின் விழுமியங்களாக பதிவு செய்யப்பட்டுள்ள நற்செயல்கள் அனைத்தும் தோபித்துவிடம் இயல்பாக இருப்பதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. இறை மதிப்பீடுகளின் படி வாழ்ந்த அவரின் இறை நெருக்கமும், சகமனிதர்களிடத்தில் அவர் காட்டிய கனிந்த அன்புறவும், உரையாடல்களில் வெளிப்படும் நயமும், அன்பும் அவரை உயர்த்திக் காட்டுகிறது. அவரின் மகன் தோபியாவிடமும் இந்த அருமையான பண்புகள் தொடர்வதை, பிரதிபலிப்பதை நம்மால் அறியமுடிகிறது.

அவரின் வாழ்வில் ஏற்பட்ட கடினமான நேரங்களை புதிய தொடக்கங்களுக்கான திறப்புகளாக மாற்றுகிறார் நம் கடவுள். ஒரு சீடத்துவ தந்தை ஒவ்வொரு சொல்லிலும், செயலிலும், வாழ்விலும், அளப்பரிய மனவுறுதியிலும் பிள்ளைகள் முன் வாழ்ந்து விட்டால் அதுவே பிள்ளைகளுக்கு தலைசிறந்த வழிகாட்டுதலாய் அமைந்துவிடும் அல்லவா!

'அறிவுத் தெளிவு, கட்டுப்பாடு, விருந்தோம்பல், கற்பிக்கும் ஆற்றல் ஆகியவற்றை உடையவராக ... பாவ காரியங்களை விட்டு விலகி நிற்பவராக, கனிந்த உள்ளத்தவராக, பொருளாசையை தவிர்ப்பவராக ... தமது சொந்த குடும்பத்தை நல்ல முறையில் நடத்தி தம் பிள்ளைகளைக் பணிவுடனும் மிகுந்த கண்ணியத்துடனும் வளர ஆவண செய்பவராக இருக்க வேண்டும்' (1திமொ 2: 4) என்ற தூய பவுலின் திருவார்த்தைகள் சபைக் கண்காணிப்பாளர்களுக்கு மட்டுமல்ல சீடத்துவ அழைப்பில் அர்ப்பணம் பெற்றுக் கொண்ட அனைவருக்குமானது.

"எல்லாவற்றிலும் நீயே முன்மாதிரியாய் இரு"என்ற வார்த்தைக்கு உயிர் கொடுத்து வாழ்வது என்பது சீடத்துவ வாழ்க்கைக்கு அழைக்கப்பட்டவர்களுக்கானது. அவர்கள் பிள்ளைகளுக்கு முன்னாலும் நம்மை உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருக்கும் அனைவருக்கும் முன்னாலும் முன்மாதிரிகையாய் வாழ்தல் என்பது அடுத்த தலைமுறையினரின் நினைவு அடுக்குகளில் இறை நம்பிக்கைகள் அதிகரிக்கசச் செய்யும் கடவுளின் தழுவலை இன்பத்திலும் துன்பத்திலும் உணர்ந்து இன்பத்தில் நிதானமும் துன்பத்தில் பக்குவமும் பெற்றவர்களாக வாழ வழி வகுக்கும் என்பது உறுதி.

**சீடத்துவத்தாய் :**

அன்னைமரியாவின் தாய்மை, தியாக அன்பு, அவர் தன் பிள்ளையின் தெய்வீகத்தை கண்டுபிடித்து அவரை முதன்முதலாய் அருஞ்செயல்களுக்கு விதை போட்ட செயல், இறைதிருவுளம் நிறைவேற்ற, மக்கள் மீட்பைப் பெற்று

நிலைவாழ்வுக்குள் புக தன் அன்பு மகன் தன் கண்முன்னே கொஞ்சம் கொஞ்சமாய் சித்ரவதைப் பட்டு இறந்ததை அமைதியாய் சகித்துக் கொண்ட மீள பதப்பட்ட நிலை... அனைத்தும் பெண்களில் பேறு பெற்றவராக்கி வைத்திருக்கிறது. அவர் தாய்மையின திருவுருவாய் உலகிற்கு ஒரு இணையற்ற சிடத்துவத்தாயாய் என்றும் நம் மனதில், உலகின் இதயத்தில் இடம்பெற்றிருக்கிறார்.

மற்றுமொருவரை நாம் சொல்ல வேண்டுமென்றால் அது மக்கபேயர் நூலில் வரும் எழு பிள்ளைகளின் தாய் தான். பிள்ளைகளை இறைப்பற்றுதலிலும், இறைஞானத்திலும், வளர்த்துவிட்டால் எந்த சூழலிலும் அப்பிள்ளைகள் இறைசாட்சிகளில் உயர்ந்து நிற்பார்கள் என்பதற்கு சாட்சியாய் நம் கண்களைக் கசிய வைக்கும் தாய்.

இறைக்கட்டளைக்கு மாறாக பிள்ளைகள் பன்றி இறைச்சியை உண்ணும்படி அரசனால் வற்புறுத்தப்பட்ட போதும் அசையாத மனவுறுதியால் நிமிர்ந்து நின்றவர்கள்தான் அவரின் வீரப்புதல்வர்கள்.

உடல் உறுப்புகள் வெட்டப்படுகின்றன. சூடாக்கப்பட்ட கொப்பரைகளில் உயிரோடு போடப்படுகின்றனர். உடல் போனாலும் உறுப்புகள் வெட்டப்பட்டாலும் அச்சமில்லை அச்சமில்லை என்று திண்மையாய் நின்று உயிர்விட்டனர்.

இளைய மகன் உயிரோடு இருப்பது கண்டு மனதை அசைத்துப் பார்க்கிறான் அரசன். "உன்னை செல்வந்தனாக, பிறர் பொறாமை கொள்ளும் அளவுக்கு உயர்த்துகிறேன். உன்னை என் நண்பாகக் கொள்கிறேன். உயர்பதவி வழங்குகிறேன்" என்ற உலக உயர்வுகளின் பட்டியல் அந்த சிறுவனை அசைக்க முடியவில்லை காரணம் அந்தத்தாய் இவ்வுலகம் செல்வங்கள் எதுவும் நிரந்தரமில்லை. இறந்தும் வாழும் நிலைவாழ்வு மட்டுமே நிச்சயம் என்று மனவுறுதியைப ஊட்டிக் கொண்டே இருந்தார். இறுதியில் எழு புதல்வருடன் அவரும் மறைசாட்சியாய் இறந்தார்.

விவிலியம் அந்த சீடத்துவத்தாயைப் பற்றி இப்படி பதிவு செய்திருக்கிறது "பெருந்தன்மை நிறைந்தவராய் பெண்ணுக்குரிய பண்பும், ஆணுக்குரிய துணிவையும்" (2 மக் 7: 21) கொண்டிருந்தவர் என்று .

சீடத்துவத்தாய், தந்தையர் எப்படி பிள்ளைகளை உருவாக்கலாம் என்பதை விவிலிய மாந்தர்களின் சாட்சிய வாழ்வைப் பார்த்து பிரமித்து போனோம். புனிதர்கள், மாமனிதர்கள் அனைவரும் இப்படித்தான் வாழ்ந்திருக்கின்றனர். இன்றைய சவால்கள் நிறைந்த வாழ்வியல் சூழலில் இவை சாத்தியமா? என்றால் இன்றும் பலர் உயிரோட்டமாக வாழ்ந்து கொண்டிருப்பதைப் பார்க்க முடியும்.

இளைஞர்களுக்கு பெற்றோராக, மேய்ப்பராக, அன்பு வழிகாட்டியாக இருக்க அழைக்கப்பட்டுள்ள ஒவ்வொருவரும் தொடர்ந்து எரிய முற்படும் சிறிய சுடரையும், வளைந்தாலும் முறிந்து விடாமலிருக்கும் நாணலையும் பாராட்டுவதற்கான தொலைநோக்குப் பார்வை கொண்டிருக்க வேண்டும்' என்று நமக்கு பிள்ளைகளை பக்குவமாக வளர்க்க அறிவுரை புகட்டுகிறார் நம் திருத்தந்தை அவர்கள்.

விண்ணுலகிலும் மண்ணுலகிலும் ஒவ்வொரு குடும்பமும் உணமையிலேயே குடும்பமாய் விளங்குவதற்கு காரணமாய் இருக்கின்ற தந்தையிடம் நான்

மண்டியிட்டு வேண்டுகிறேன்.... "அன்பே ( நம் ) உங்கள் வாழ்வுக்கு ஆணி வேரும் அடித்தளமுமாய் அமைந்து " (எபே. 3: 14, 15 ) கடவுளின் முழுநிறைவை சீடத்துவக் குடும்பங்களாக நம் குடும்பங்கள் பெற்றுக் கொள்ளவும், நம் ஆண்டவர் இயேசு நம் குடும்பங்களின் தலைவராய், வழிகாட்டியாய், உற்ற தோழராய் இருந்து வழிநடத்த வேண்டும் என்று பிராத்திப்போம்.

நற்பணி **ஜெஸி. P.**

ஜூன் 2024 புனித பணியாளர்கள் பயிற்சி – குழு 2

| நாள் | மையம் | வழிநடத்துபவர்கள் |
|---|---|---|
| 02.06.23 | அருள்சான்று நிலையம் பரமக்குடி | நற்பணி J. மேரிபுஷ்பம்<br>நற்பணி K. ஜஸ்டின் கபிரியேல் |
| 02.06.24 | தந்தை ஜோசப் சேவியர் அரங்கம், காளையார்கோவில் | நற்பணி A. பிரான்சிஸ் சேவியர்<br>நற்பணி M. லூயிஸ்ஜான்போஸ்கோ<br>நற்பணி P. சகாயராணி |
| 02.06.24 | புனித அருளானந்தர் திருத்தலம், ஓரியூர் | நற்பணி A. சகாயதமிழ் செல்வி<br>நற்பணி P. அருள்வளன்<br>நற்பணி இரா. அருள்பிரகாசம் |
| 08.06.24 | புனித குழந்தை தெரசாள் கோவில், தங்கச்சிமடம் | நற்பணி J. மேரிபுஷ்பம்<br>நற்பணி X. லூர்துமேரி<br>நற்பணி K. பில்கேட்ஸ் சாவியோ |
| 09.06.24 | புனித செபமாலை அன்னை கோவில், இராமநாதபுரம் | நற்பணி G. ஜெனிபர்<br>நற்பணி பெ.தெரசா மிரண்டா<br>நற்பணி S. வில்லியம் |
| 09.06.24 | வியான்னிஅருள்பணிமையம் சிவகங்கை | நற்பணி R. ஆரோக்கியசாமி<br>நற்பணி G. மிக்கேல் பிரபாகர்<br>நற்பணி A. பிரான்சிஸ் சேவியர் |
| 09.06.24 | புனித அன்னாள் கோவில் குருமிளாங்குடி | நற்பணி S. மோட்ச அலங்காரம்<br>நற்பணி J. ஆரோக்கியசாமி<br>நற்பணி X. அந்தோனி விக்டர் |
| 09.06.24 | அமலஅன்னை அமைதியகம் காயாவயல் | நற்பணி A. சத்தியேந்திரன்<br>நற்பணி S. பால்ராஜ் |
| 16.06.24 | புனித ஆரோக்கிய அன்னை கோவில், சாயல்குடி | நற்பணி M. அருள்மரியநாயகம்<br>நற்பணி T. ஸ்டீபன் |
| 23.06.24 | தூய ஆவியார் கோவில் இராசசிங்கமங்கலம் | நற்பணி S. மோட்ச அலங்காரம்<br>நற்பணி A. ஆரோக்கியமேரி<br>நற்பணி A. ஜான்சி மேரி |

| நாள் | நிகழ்வு | இடம் |
|---|---|---|
| 02 | வட்டாரத் தியானக் கூட்டம் | செக்காலை, செஞ்சை, இராம்நகர், சாலைக்கிராமம். |
| 02. | தொடர் களப்பணி | கஸ்பார்நகர் |
| 02. | புதிய பணியாளர்கள் பயிற்சி I & II | அருள்சான்று நிலையம், பரமக்குடி<br>தந்தை ஜோசப் சேவியர் அரங்கம் காளையார்கோவில்,<br>புனித அருளானந்தர் திருத்தலம்,ஓரியூர் |
| 05 | அருளமுது ஆதாரக்குழு கூடுகை | அமைதியகம், காயாவயல்.<br>அருள்சான்று நிலையம், பரமக்குடி |
| 07 | முழு இரவு செபம் | மகிண்டி மிக்கேல்பட்டணம் |
| 07 | நற்பணி அன்னம்மாள் மகன் குருத்துவ அருள்பொழிவு | வட்டாணம், தொண்டி |
| 07. | திரு இருதயப் பெருவிழா | |
| 08. | வட்டாரத் தியானக் கூட்டம் | அரிமளம் |
| 08 | பரிந்துரை செபம் | திருஇருதய ஆண்டவர் திருத்தலம் இடைக்காட்டூர் |
| 08. | புதிய பணியாளர்கள் பயிற்சி I & II | புனித குழந்தை தெரசா கோவில் தங்கச்சிமடம் |
| 09. | புதிய பணியாளர்கள் பயிற்சிI I & II | புனித செபமாலை அன்னை கோவில், இராமநாதபுரம்<br>வியான்னி அருள்பணிமையம், சிவகங்கை<br>புனித அன்னாள் கோவில், குருமிளாங்குடி |
| 09 | வட்டாரத் தியானக் கூட்டம் | சி.கே. மங்கலம், ம.மிக்கேல்பட்டணம், காளையார்கோவில் |
| 16. | தொடர் களப்பணி | பெருமாள் குரும்பன்பட்டி, கமுதி<br>சாயல்குடி |
| 16. | புதிய பணியாளர்கள் பயிற்சி I & II | அமலவை அன்னை அமைதியகம், புனித ஆரோக்கிய அன்னை கோவில், சாயல்குடி |
| 16. | வட்டாரத் தியானக் கூட்டம் | பரமக்குடி, கமுதி |
| 22. | சிறப்பு வட்டாரக் கூட்டம் | தங்கச்சிமடம் |
| 23. | தொடர் களப்பணி | அஞ்சுகேட்டை, கஸ்பார்நகர், இருதயபுரம். |
| 23. | புதிய பணியாளர்கள் பயிற்சி I & II | தூய ஆவியார் கோவில், ஆர்.எஸ் மங்கலம், புனித அந்தோணியார் கோவில், கமுதி |
| 23. | வட்டாரத் தியானக் கூட்டம் | இராமநாதபுரம், முத்துப்பேட்டை சிவகங்கை |

## ஜூன் 2024 புதிய பணியாளர்கள் பயிற்சி — குழு 1

| நாள் | மையயம் | வழிநடத்துபவர்கள் |
|---|---|---|
| 02.06.24 | அருள்சான்று நிலையம் | நற்பணி M. மரியகிரகோரி |
| | பரமக்குடி | நற்பணி A. யூஜின் அமலராஜ் |
| 02.06.24 | தந்தை ஜோசப் சேவியர் | நற்பணி G.M.S. ராணி |
| | அரங்கம், காளையார்கோவில் | நற்பணி V. செங்கோல்மேரி |
| 08.06.24 | புனித குழந்தை தெரசாள் | நற்பணி G.M.S. ராணி |
| | கோவில், தங்கச்சிமடம் | நற்பணி S. மோட்ச அலங்காரம் |
| | | நற்பணி J. ரபேக்கா |
| 09.06.24 | புனித செபமாலை அன்னை | நற்பணி A. சகாயராஜா |
| | கோவில், இரோமநாதபுரம் | நற்பணி J. மேரிபுஷ்பம் |
| 09.06.24 | அமலஅன்னை அமைதியகம் | நற்பணி A. சகாயராணி |
| | காயாவயல் | நற்பணி J. அருள் இளங்கோ |
| | | நற்பணி P. அமலோற்பவஆரோக்கியராணி |
| 16.06.24 | புனித ஆரோக்கிய அன்னை | நற்பணி J. மேரி புஷ்பம் |
| | கோவில், சாயல்குடி | நற்பணி G. ஜெனிபர் |
| | | நற்பணி A. சந்திரபுஷ்பா |
| 23.06.24 | தூய ஆவியார் கோவில் | நற்பணி M. மரியகிரகோரி |
| | இராசசிங்கமங்கலம் | நற்பணி A. பெமிலா ஸ்டீபன் |
| | | நற்பணி S. தைனஸ்மேரி |
| 23.06.24 | புனித அந்தோணியார் | நற்பணி G.M.S. ராணி |
| | கோவில், கமுதி | நற்பணி M. அருள் மரியநாயகம் |
| | | நற்பணி T. மைக்கேல் |

## ஒரு பணியளாரின் மன்றாட்டு



உலக வரலாற்றை இரண்டாகப் பிரித்தவரே இறைவா! வரலாற்றில் ஒன்றுமே பெரிதாக நடக்காத நூற்றாண்டுகளும் உண்டு. ஒரு நூற்றாண்டையே புரட்டிப் போட்ட சில வாரங்களும் உண்டு. எழுதப்படாத வரலாறுகளும் உண்டு. திருத்தி எழுதப்பட்ட வரலாறுகளும் உண்டு. அமைய இருக்கும் அரசு எத்தகையது என்பதை நாங்கள் அறியோம். இந்தப் புதிய அரசில் யார் ஆட்சிக் கட்டிலில் அமர இருந்தாலும், யாரையும் வேறுபாடு காட்டித் தீய எண்ணத்தோடு மதிப்பிடாமல் (யாக் 2:4), ஆள் பார்த்துச் செயல்படும் மனநிலை இல்லாதவர்களாய் (யாக் 2:9) பணி புரிந்திடும் மனநிலையைத் தர வேண்டும் என்று இறைவா! உம்மை மன்றாடுகிறோம்.




கடந்த மாதத்தில் உள்ளுந்துதலில் வளர, பத்து வழிமுறைகளில் இரண்டாவது வழிமுறையான நமது நோக்கம் என்ன அல்லது ஏன் அந்த நோக்கம் என அறிய முயல்வது பற்றி பார்த்தோம். இந்த மாதத்தில் மூன்றாவது வழிமுறையான எனது வாழ்க்கையின் இலக்குகள் என்ன என்பதை பதிவு செய்தல். குறிப்பாக எனது எதிர்நோக்குகள், கனவுகள், ஆசைகள் மற்றும் நீண்ட, குறுகிய கால இலக்குகள் ஆகியவற்றை பதிவுசெய்தல் பற்றி பார்ப்போம்.

**நீண்டகால இலக்குகளை பதிவு செய்யும் முறை**

**முதலாவது வழிமுறை:** ஜப்பான் நாட்டு மக்கள் அதிக ஆயூட்காலத்தை வாழ்வது மட்டும் அல்லாமல் அதில் மகிழ்ச்சியோடும் நிறைவோடும் வாழ்கிறார்கள் என்பதை தலைசிறந்த, உலகளாவிய உலவியல் அறிஞர்கள் ஆராய்ந்து அதற்கான எட்டு காரணங்களை வரிசைப்படுத்தி உள்ளனர். அதில் முதல் காரணம் நமது நோக்கத்தை அறிந்து கொள்ளுதல் ஆகும். இதை ஜப்பான் மொழியில் (IKIGAI) எனவும் ஆங்கிலத்தில் FIND YOUR PURPOSE என குறிப்பிட்டு அந்த நோக்கத்தை எப்படி கண்டு கொண்டு பதிவு செய்வது என்பதை தெளிவாக விளக்குகின்றனர். இதில் நீண்ட கால இலக்கை கண்டுகொள்ள நான்கு வகையான வழிமுறைகளை சொல்கின்றனர். அவைகள் கீழ்வருகின்றன.

1) எதைச் செய்வதில் நீங்கள் நேசிக்கின்றீர்கள்
2) எதில் நீங்கள் சிறந்து விளங்குகின்றீர்கள்
3) எது இந்த உலகத்திற்கு தேவைப் படுகிறது.
4) எதற்காக உங்களுக்கு ஊதியம் வழங்கப்படும்.

இந்த வழிமுறைகள் நான்கும் ஒடு நேர்க்கோட்டில் சந்திக்கும், அந்த ஒரு நேர்க்கோட்டில் சந்திக்கும் ஒரு தொழிலோ, ஒரு வேலையோ அல்லது ஒரு செயல்பாடோ உங்கள் நோக்கமாக அமையும். இந்த நான்கு வகையான வழிமுறைகளை வைத்து ஏழு வகையான செயல்பாடுகளை உங்கள் பதிவேட்டில் எழுதிக் கொள்ளலாம். இவைகளே உங்கள் நீண்டகால இலக்காக ஆகும்.

உதாரணமாக உங்களுக்கு தெரிந்த விஷங்களை மற்றவர்களுக்கு எளிமையாக புரியும் வண்ணம் சொல்லி கொடுப்பது உங்களுக்கு மகிழ்ச்சியை கொடுக்கிறது. அதே வேலையில் அப்படி சொல்லி கொடுப்பதில் நீங்கள் தனிதிறன் பெற்றுள்ளீர்கள். அத்தகைய திறன் கொண்ட உங்களை போன்ற நபர்கள் இந்த உலகத்திற்கு தேவைப்படுகிறார்கள், அப்படிபட்ட திறமையுள்ள, நீங்கள் மகிழ்ந்து செயல்படும் அந்த வேலைக்கு ஊழியம் தர இந்த உலகம் தயாராக இருக்கிறது என்றால் ஒரு நல்ல ஆசிரியராக பணி செய்வதே உங்கள் நோக்கம் ஆகும்.

**இரண்டாவது வழிமுறை:** நமது நோக்கத்தை சரியாக கணக்கிட்டால். நமது இலக்கு என்ன என்பதை கணிக்க முடியும். கீழ்காணும் சில கேள்விகளுக்கு சரியான பதில் கொடுத்தால் நமது இலக்கு என்ன என்பது நமக்மே புலப்படும். இதை ஆழ்ந்த சிந்தனையோடு திறந்த மனதோடு பதில் தர வேண்டும்.

1) நீங்கள் யார் ?
2) எதை செய்வதில் காண் நீங்கள் சலிப்பு இல்லாமல் மகிழ்கின்றீர்கள்.
3) யாருக்காக அந்த செய்களை செய்கின்றீர்கள்?
4) அவர்களுடைய தேவை என்ன?
5) அவர்கள் எத்தகைய மாற்றம் அடைகின்றனர் ?

உதாரணமாக, நீங்கள் மற்றவர்களை நேசிக்கும் ஒரு நபர். சலிப்பு இல்லாமல் மற்றவரின் உடல் வேதனைகளை சரிசெய்வதில் மகிழ்ந்து செயல்படுகிறீர்கள். நோயுற்ற நோயாலிகளுக்காக அதை செய்கிறீர்கள். அந்த நோயாலிகள் நோய்கள் குணமாக்கபடுவதே அவர்களின் தேவை. அவர்கள் நோயிலிருந்து சுகமடைந்து நல்ல உடல் ஆரோக்கியத்தைப் பெறுகின்றனர். அப்படி என்றால் நல்ல மருத்துவராவதே உங்கள் நீண்ட கால இலக்கு ஆகும்.

**மூன்றாவது வழிமறை:** நமது வாழ்வில் நாம் படும் துன்பங்களில் இருந்தும் நமது இலக்கை கண்டு கொள்ளலாம், கீழ்காணும் கேள்விகளுக்கு சரியான பதில் கொடுத்தால், நாம். சிறு வயதில் தொடர்ந்து அனுபவித்த துன்பங்கலிருந்து கண்டிப்பாக நமது நீண்ட கால இலங்குகளை கண்டுகொள்ள முடியும்.

1) எனது வாழ்வின் பெரிய வலிகள் என்ன?
2) அதே போன்ற வலிகளை மற்றவர்கள் சந்திக்கின்றார்களா?
3) நான் அவர்களின் வலியை கடந்து வர உதவ முடியுமா?
4) 2 மற்றும் 3ஆவது கேள்விக்கு எனது பதில் 'ஆம்' என்றால் முதல் கேள்வியில் உள்ள உங்கள் வலிகளை குறித்துக்கொண்டு அதை உங்கள் இலக்காகக் மாற்றிக் கொள்ளுங்கள்.

**குறுகிய கால இலக்குகளை பதிவு செய்வது:**
உங்களுக்கு பிடித்த சின்ன ஆசைகள், செயல்பாடுகள் நல்ல தருணங்கள் சின்ன சின்ன கனவுகள், நீங்கள் மகிழ்ந்து செயல்படும் சிரிய தருணங்கள் ஆகிவற்றை வரிசையாக ஒரு காகிதத்தில் 101 வரை எழுதவும். அது ஒரு இடத்திற்கு போவதாக இருக்கலாம், யாருக்காவது உதவி செய்வதாக இருக்கலாம். இப்படி சின்ன சின்ன மகிழ்ச்சியை தரும் சின்ன தருணங்களை எழதவும். இதுதான் உங்களின் குறுகிய கால இலக்குகள் ஆகும், அந்த 101 எண்ணிக்கையிலிருந்து ஒவ்வொரு மாதமும் 3 இலக்குகளை எடுத்து கொண்டு அதை செயல்படுத்த முயலலாம்
முன்பு சொன்ன மூன்று முறைகளில் ஏதாவது ஒன்றை பயன்படுத்தி உங்களின் நீண்ட கால இலக்கை எடுத்து கொண்டு 10 ஆண்டுகள் அல்லது 5 ஆண்டுகள் கால அவகாசம் எடுத்துக்கொண்டு அதை அடையலாம்.

**அசைபோட அரை நிமிடம்:**
"நீண்ட, குறுகிய கால இலக்குகள் நமக்கு நல்ல இலக்கணத்தை உருவாக்கும்."

சகோ. **S.ஜான் ஜோ பிரபாகர். SHJ.**
மனநல ஆற்றுபடுத்துநர். பரமக்குடி.

# புனித ஜஸ்டின்



புனித ஜஸ்டின் பாலஸ்தீன நாட்டில் உள்ள சமாரியாவில் கி.பி. 100 வது ஆண்டில் பிறந்தார். இவருக்கு சிறு வயது முதலே நல்ல தத்துவத்தைக் கற்றறிய வேண்டும் என்ற ஆர்வம் இருந்தது. எனவே இவர் பலரிடம் சென்று தத்துவத்தைக் கற்றறிய முற்பட்டார். ஆனால் யார் கற்றுக்கொடுத்த தத்துவமும் இவருக்கு மனநிறைவைத் தரவில்லை.

இந்த சமயத்தில்தான் இவர் எபேசுஸ் கடற்கரையில் நின்றுகொண்டிருந்தபோது பெரியவர் ஒருவர் இவரிடம் கிறிஸ்துவைக் குறித்து போதிக்கத் தொடங்கினார்.

பெரியவர் சொன்ன வார்த்தைகளால் தொடப்பட்ட ஜஸ்டின் திருமுழுக்குப் பெற்று கிறிஸ்துவராக மாறினார். அதுவரைக்கும் மனித வாழ்க்கை தொடர்பாக அவர் எழுப்பிய கேள்விகளுக்கு விடையையும் கிறிஸ்தவ மறையில் கண்டுகொண்டார். இதனால் கிறிஸ்தவ நெறி அவருக்கு மிகவும் பிடித்துப் போனது. எனவே அவர் அதுவரைக்கும் கற்றுவந்த பிளேட்டோவின் தத்துவார்த்த சிந்தனைகளையும் கிறிஸ்தவ நெறியின் தத்துவார்த்த சிந்தனைகளையும் இணைத்துப் புதிய தத்துவார்த்த சிந்தனையினை உலகிற்கு அளித்தார். அத்தோடு கூட கிறிஸ்தவ நெறியை எங்கும் துணிவோடு அறிவிக்கத் தொடங்கினார்.

இவருடைய நற்செய்தி அறிவிப்பினால் பலரும் கிறிஸ்துவைப் பின்பற்றத் தொடங்கினார்கள். ஜஸ்டின் அவர்களிடம் ஆண்டவருடைய நற்செய்தியை எல்லாருக்கும் அறிவிக்கவேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொண்டார். அவர்களும் அவருடைய அன்புக் கட்டளைக்கு இணங்கி ஆண்டவரின் நற்செய்தியை எல்லாருக்கும் அறிவிக்கத் தொடங்கினார்கள்.

இதற்கிடையில் மார்குஸ் அரேலியஸ் என்ற உரோமை மன்னன் கிறிஸ்தவத்தைப் பின்பற்றக்கூடியவர்களை சிறைபிடித்து சித்ரவதை செய்யத் தொடங்கினான். ஜஸ்டினும் அவருடைய நண்பர்களும் கிறிஸ்தவத்தை எல்லாருக்கும் அறிவிக்கின்றார்கள் என்று கேள்விப்பட்டு அவர்களை விசாரணைக்கு உட்படுத்தினான். விசாரணையின்போது உரோமை அரசனும் ஆளுநனும் ஜஸ்டின் மற்றும் அவருடைய நண்பர்களுமம் "நீங்கள் கிறிஸ்துவை மறுதலித்துவிட்டு, உரோமைக் கடவுளை வழிபடுங்கள். அப்படிச் செய்தால் நீங்கள் விடுவிக்கப்படுவீர்கள்" என்று வஞ்சக வார்த்தைகளைப் பேசினார்கள். ஆனால் அவர்கள் நயவஞ்சககர்களின் வார்த்தைகளுக்கு அடிபணியாமல் கிறிஸ்தவ விசுவாசத்தில் மிக உறுதியாக இருந்தார்கள்.

இதனால் சினம் கொண்ட அரசன் ஜஸ்டினையும் அவருடைய நண்பர்களையும் தலைவெட்டிக் கொன்றான். கி.பி. 165 ஆம் ஆண்டு இதே நாளில் ஜஸ்டின் ஆண்டவர் இயேசுவுக்காக இரத்தம் சிந்தி தன்னுடைய இன்னுயிரைத் துறந்தார்.

நற்பணி **செங்கோல்மேரி**, காளையார்கோவில்

## என்னை மன்னியும்

- கேட்போர் அனைவரும் பெற்றுக் கொள்கின்றனர். தேடுவோர் கண்டடைகின்றனர். தட்டுவோருக்குத் திறக்கப்படும் என்பதை மறந்து முழுமையான நம்பிக்கையின்றி இறைவனைத் தேடியதை எண்ணி மனம் வருந்துகிறேன். இறைவா என்னை மன்னியும் (லூக் 11:10).
- உடைந்த உள்ளத்தார்க்கு அருகில் ஆண்டவர் இருக்கின்றார் என்பதை மறந்து வேதனை துன்பங்களின் நடுவில் இறைவனின் உடனிருப்பை உணராமல் வாழ்ந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன். இறைவா என்னை மன்னியும் (திபா 34:18).
- அன்பில்லாதோர் கடவுளை அறிந்துகொள்ளவில்லை. ஏனெனில் கடவுள் அன்பாய் இருக்கின்றார் என்பதை மறந்து. அன்பின்றி சுயநலத்தோடு வாழ்ந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன், இறைவா என்னை மன்னியும் (1 யோவான் 4:8)

நற்பணி S.P. **சவரிமுத்து**, இராம்நகர்

## செப வீரர்களுக்கு

**இம்மாத செபக் கருத்து**

- போர் மற்றும் வறுமையினால் புலம் பெயர்ந்தோர் பயணங்களில் பாதுகாப்பும். செல்லுமிடத்தில் புகலிடமும் பெற்று ஏற்றுக் கொள்ளப்பட
- இந்தியாவில் இறைவன் விரும்பும் நல்லாட்சி அமைந்து ஏழைகளின் வாழ்வு வளம்பெற
- இந்தியாவின் சனநாயாக மற்றும் மதச்சார்பின்மை பாதுகாக்கப்படவும், அவற்றைப் பேணும் அமைப்புகள் வலுப்பெறவும்
- புதிய கல்வியாண்டைத் துவங்கும் குழந்தைகளின் பாதுகாப்பும், உரிமைகளும் பேணப்பட.
- சிறப்பு யூபிலி ஆண்டின் தயாரிப்புப் பணிகள் கனி கொடுத்திடும் நிகழ்வுகளாகிட

**விரும்பத்தக்க செயல்பாடு:**

- ஏழைக் குழந்தைகள் நல்ல கல்வி பெற வழிகாட்டுதல், உதவுதல்
- இந்தியாவில் நல்லாட்சி அமைய தனி செபங்களில் உருக்கமாய் வேண்டுதல் செய்தல்



அருளமுது ஆதாரக்குழுக் கூடுகை - அமைதியகம்



வட்டாரத் தியானக் கூட்டம் - இடைக்காட்டூர்



அறிமுகப் பயிற்சி - ஆர்.எஸ் மங்கலம்



வட்டாரத் தியானக் கூட்டம் - மானாமதுரை





சிறுவர் நம்பிக்கை வள பயிற்சி - அருள்சான்று நிலையம்





படங்களைக் கொண்டு இறைவார்த்தையை கண்டுபிடியுங்கள்?

படங்களைக் கொண்டு நினைவுக்கு வரும் இறைவார்த்தையை சட்டென்று சொல்லுங்கள் பார்ப்போம்.

துப்பு வேண்டுமா? **1 கொரிந்தியர் 1,2,3 அதிகாரங்களுக்குள்**

















**மையங்களில் ஆவியானவர் பெருவிழா**






**Narseithi Paniyalar** (தனிச்சுற்றுக்கு மட்டும்)
is published on behalf of the Commission for Proclamation, Diocese of Sivagangai from Arulchandru Nilayam (Faith Resource Development Centre), Brothers of the Sacred Heart, Ulaganathapuram, Vendhoni (B.P.O.) Paramakudi - 623 701, Ramnad Dist. Tel : 04564- 230453.
www.arulchandrunilayam.org |Email: arulchandrupmk@gmail.com